கிறிஸ்மஸ் சிறப்பிதழ்
இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 17 | திகதி : 25.12.2025 | விலை : 75.00

## திருத்தந்தையின் கிறிஸ்மஸ் செய்தி


### கிறிஸ்து பிறப்பில் அமைதியையும் அன்பையும் பரவச் செய்யுங்கள்!



"கடவுள் நம் அனைவருக்கும் அவரது அன்பைக் கொடையாகக் கொடுக்க விரும்பிய நிகழ்வுதான் கிறிஸ்து பிறப்பு. கடவுள் மனிதகுலத்திற்கு, குறிப்பாக சிறியவர்களுக்கும் மிகவும் வலுக்குறைந்தவர்களுக்கும் அதிக நெருக்கமாக இருக்கிறார்" என்பதை கிறிஸ்து பிறப்பு விழா எடுத்துக் கூறுகின்றது. கிறிஸ்து பிறப்பு என்பது கடவுளின் அன்பின் கொடையைப் பகிர்ந்து கொள்வது பற்றியது. நாம் அமைதி, அன்பு மற்றும் ஒன்றிப்பை வளர்க்கவும் வேண்டும். கிறிஸ்து பிறப்பு ஒவ்வொருவரின் இதயத்திலும் மகிழ்ச்சியையும் அமைதியையும் எழுப்புகிறது என்பதை இக்காலத்தில் உணர்ந்து கொள்வோம் கிறிஸ்து பிறப்பில் கொண்டாடப்படும் இந்த உணர்வு, இந்த நாட்களில் மட்டுமல்ல, ஆண்டு முழுவதும் வாழ்ந்து காட்டப்பட வேண்டும். கிறிஸ்து பிறப்புக் காலத்தில் கடவுளின் உடனிருப்பால் உந்தப்பட்டு புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடனும் எதிர்நோக்குடனும் புத்தாண்டில் கூட்டொருங்கியக்கத் திருஅவையாகப் பயணிப்போம்.

பாதுகாவலன் வாசக நெஞ்சங்களுக்கு நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

## யாழ். ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி



ஜூபிலி ஆண்டு 2025-இல், நமது ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பிறப்புத் திருநாளை நாம் கொண்டாடும் இக்காலத்தில் நமது இதயங்கள் மகிழ்ச்சியுறும் அதேவேளை ஆழ்ந்த வேதனை நிறைந்தும் காணப்படுகின்றன.

கிறிஸ்மஸ் என்பது துன்ப மற்ற உலகிற்கான கொண்டாட்டம் அல்ல. மாறாக, துன்பத்தின் நடுவே இறைமகனின் வருகையை அறிவிக்கும் விசுவாச அறிக்கை ஆகும். மரணமும் அழிவும் சூழ்ந்த மனித வாழ்வின் நடுவே இறைமகன் மனிதனாகப் பிறந்து, மனித வேதனையைத் தன் மீது ஏற்றுக் கொண்டார். பெத்லகேமின் கொட்டிலில் பிறந்த குழந்தை இயேசு, துன்புறுவோரின் இறைவனாகவும், மரணத்தை எதிர்கொள்ளும் மனிதனின் நம்பிக்கையாகவும் தன்னை வெளிப்படுத்துகிறார். "அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது இருள் அதன் மேல் வெற்றி கொள்ளவில்லை" (யோவான் 1:5) என்ற இறை வார்த்தைக்கு அமைவாக இருள் சூழ்ந்த உலகில் ஒளியேற்ற இறைமகன் மீண்டும் மீண்டும் எம்மத்தியில் மனிதாவதாரம் எடுக்கின்றார்.

அண்மைக் காலத்தில் தொடர் கனமழை, வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு போன்ற ப.2



பிரசவத்துக்கு வீடுதேடி
பெத்லகேமில் அலைந்தவரே
எங்களுக்கும் வீடுகளில்லை
மாட்டுத் தொழுவமும் மிச்சமில்லை
இது மலையுதிர் காலம்

முகடடேறிய வெள்ளம்
முறைத்துக்கொண்டு ஓடியபோதுதான்
அலறியடித்துத் தேடினோம்
நோவாவின் படகுகளை

எங்கள் பிணங்கள்
மிதந்தோடும் ஆறுகள் அருகே
எம் சீயோனை நினைத்து அழுதோம்
அலரிச் செடிகளும் இல்லை
யாழ்களின் பாடல்களும் இல்லை

இந்த மலைச் சரிவில்தான்
இன்னமும் கேட்கிறது
நசுங்கிப்போன என் மகளின் சிரிப்புக்களும்
அவள் வளர்த்த மல்லிகைச் செடியின்
முனகல்களும்

இத்தனைக்குப் பிறகும்
நாங்கள் இருக்கிறோம்
நம்பிக்கையில் வேர் பிடிப்போம்
கடைசி அடிமரத்தின் ஓரம்
மீண்டும் துளிர்த்து வருவொம்

இனியும் இனியும்
நாங்கள் இருப்போம்
பாலைவனங்களில் நடப்போம்
செங்கடலைக் கடப்போம்
மேகத்தூணில் நெருப்புத்தூணில்
எம்மோடு நீர் இருப்பதனால்

உதிர்ந்து வீழ்ந்த எங்களை எடுத்து
உறுதி செய்யட்டும் உமது பிறப்பு
புதிய ஆண்டு வரமாய் வரட்டும்
விழுதெனத் தாங்கிடும் கைகள் உண்டு
இனி விடியும் எங்கள் வானம்

இந்தக் கூடிழந்த
பறவைகளின் பாடல்
பெரும் குரலோடு
மீண்டும் கேட்கும்
அந்த மலைவானம் எங்கும்

அருட்பணி. எஸ் . அஜந்தன்

கடவுள் நம்மோடு





2026
நத்தார் புதுவருட நல்வாழ்த்துகள்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## ஏழைகளில் பாலக இயேசுவைக் காண்போம்

அண்மையில் வெளியான திருத்தந்தை 14ம் லியோ அவர்களின் அப்போஸ்தலிக்க மடலிலிருந்தும் நான் கடந்த மாதம் மலேசியாவில் நடைபெற்ற மாபெரும் “நம்பிக்கையாளரின் திருப்பயணம்” என்கின்ற மாநாட்டில் பங்கேற்றுப் பெற்ற அனுபவத்திலிருந்தும் இத் தலையங்கத்தில் கிறிஸ்து பிறப்புக் கூறும் செய்தியைக் காண முயல்கின்றேன்.

எம் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் பேரழிவை ஏற்படுத்திப் பலரை ஏழ்மை வாழ்வுக்குள் கொண்டு வந்துள்ளது. எனவே இக்காலக் கிறிஸ்து பிறப்பு விழாவில் ஏழைகளை நேசிக்கப் பாலக இயேசு அழைப்பு விடுத்துள்ளார்.

“கடவுளின் இதயத்தில் ஏழைகளுக்கும் ஓரங்கட்டப்பட்டோருக்கும் ஒதுக்கப்பட்டோருக்கும் தனியோர் இடம் உண்டு. இதனால் அவர்கள் திருஅவையின் இதயத்திலும் இருக்கின்றனர். ஏழைகளாக்கப்பட்டோரிடம் இயேசுவின் முகத்தையும் ஊனுடலையும் இனம் கண்டுகொள்ள கிறித்தவக் குழுமம் முழுவதும் அழைக்கப்படுகிறது” மேலும், அவர் ஏழ்மையில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். ஏழையாகவும் தாழ்ச்சி உடையவராகவும் இருந்தவர் ஏழைகளிடம் நட்புறவு கொண்டிருந்தவர் அவர்களுடன் சமபந்தி அமர்ந்த வர் ஏழ்மைக்கான காரணிகளைக் கண்டித்தவர்.

அவருடைய மனநிலையைக் கொண்டிருக்க வேண்டிய திரு அவையும், ஏழைகளுக்கும் விளிம்புநிலையின ருக்கும் முதன்மை தருவது அவசியம். இது கிறித்தவ நம்பிக்கையின் இன்றியமையாத ஒரு கூறும், இறையியல் அடிப்படையிலான கடமையும் ஆகும்.

“பல வேளைகளில் ஏழைகளே திரு அவையில் பெரும்பான்மையினராக உள்ளனர். அந்த ஏழைகளோடு ஏழையாக இருக்கவும், அவர்களது குரலைக் கேட்கவும், அவர்களுக்கு ஆவியார் தரும் அருங்கொடைகளை எவ்வாறு கண்டறிவது என அவர்களோடு இணைந்து கற்றுக்கொள்ளவும் அது அழைக்கப்படுகிறது” (இஅ 19).

ஏழைகள் திரு அவையிடம் கேட்பது அன்பையே. அன்பு செய்தல் என்பது அவர்களுக்கு நமது ஏற்பையும் மதிப்பையும் புரிதலையும் தருவது. அவை இன்றி உணவு, பண உதவிகள் என்பனவற்றை எவ்வளவுதான் தந்தாலும், அது அவர்களது மனித மாண்பை முழுமையாக மதிக்கத் தவறுவது ஆகும். அத்தகைய புரிதலும் மதிப்பும் தருவதுதான் பிறருடைய உதவிகளின் பயனாளர்களாகிய அவர்களைத் தங்களது வளர்ச்சியைத் தாங்களே முடிவு செய்ய ஆற்றல் படைத்தவர்கள் ஆக்குகிறது.

மாண்புடன் வாழ்வதற்கான பொருள் வளம் அற்றவர்கள், புலம்பெயர்ந்தோர், அகதிகள், பழங்குடியினர், வன்முறைக்கும் துன்புறுத்தலுக்கும் ஆளாக்கப்பட்டோர் சிறப்பாகப் பெண்கள். தீய பழக்கங்களுக்கு அடிமையாகி அவற்றிலிருந்து மீண்டுவரப் போராடுவோர், அமைப்பு முறையாலேயே குரலற்றோர் ஆக்கப்பட்ட சிறுபான்மையினர், கைவிடப்பட்ட முதியோர், இனவெறி, சுரண்டல், ஆள் கடத்தல் என்பனவற்றிற்கு ஆளாக்கப்பட்டோர். அதிலும் குறிப்பாக இளையோர், சுரண்டப்படும் தொழிலாளர்கள், பொருளாதாரத்தின் பயன்களிலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள், விளிம்புநிலையினர் ஆகிய அனைவரும் ஏழைகளே.

ஏழைகளின் நலனுக்காகச் செயற்படுவது என்பது ஏழ்மை மற்றும் ஒதுக்கப்படுதல் என்பனவற்றிற்கான காரணிகளை அகற்றுவதும் ஆகும். அவர்களுடைய உரிமைகளுக்காகக் குரல் எழுப்புதல், அவர்களுக்கு எதிரான அநீதிகளைப் பொதுவெளியில் வெளிப்படையாகக் கண்டித்தல் என்பனவையும் அதில் உள்ளடங்கும்.

அவர்களுக்கான ஆதரவுக் குரலும் செயற்பாடுகளும் மிகவும் அவசியம். மேலும், பல நாடுகளில் நிகழும் போர்களும் பயங்கரவாதமும் புதுவகை ஏழைகளை உருவாக்கியுள்ளன. அவர்களின் குரல் தங்களுக்குக் கேட்கிறது என அறிவிப்பதுடன், அவற்றிற்குக் காரணிகளான ஊழல் அரசியல் மற்றும் சுரண்டல் பொருளா தார அமைப்புகளையும் மாமன்றம் கண்டிக்கிறது.

எனவே இவ்வாண்டு கிறிஸ்மஸ் காலத்தில் எம் அரசில் உள்ளோர் துயர் துடைப்போம். புத்தாண்டில் ஏழ்மையற்ற ஓர் உலகு செய்வோம்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# மல்வம் பங்கில் சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா



சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளுடைய முப்பொன் விழா மல்வம் திருக்குடும்ப ஆலயத்தினுடைய ஞானப்பிரகாசர் கலையரங்கில் 07.12.2025 அன்று நடைபெற்றது. இதில் மல்வம் பங்கினுடைய நான்கு ஆலய மக்களும் நான்கு கலை நிகழ்வுகளை மேடையேற்றினர். றோஜா மாதா ஆலய மாணவர்களின் நடன நிகழ்வும் அந்திரான் ஆலய மக்கள் வில்லிசையும், உடுவில், - மல்வம் பங்கு மறைக்கல்வி மாணவர்கள் சுவாமி ஞானப்பிரகாசருடைய “வாழ்வும் பணியும்” பற்றிய உரைநடைச் சித்திர நாடகமொன்றையும் மேடையேற்றினர்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ் மாகாண அமதிகள் முதல்வர் அருட்பணி போல் ஜெயந்தன் பச்சேக் அ.ம.தி. அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக இளவாலை மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி ஏ.ஜே.ஜேசுதாஸ் அடிகளாரும், அருட்பணி செபமாலை அன்புராசா அமதி அடிகளாரும், கிளறேசியன் சபை அருட்தந்தை அருள்ராஜ் CMF அடிகளாரும் கலந்து கொண்டனர்.

இந்த முன்பொன்விழா நிகழ்வையொட்டி மல்வம் பங்கு மறையாசிரியர்கள் நடாத்திய சுவாமி ஞானப்பிரகாசர் பற்றிய வினாவிடைப் பரீட்சையில் இளவாலை மறைக்கோட்டத்தின் 12 பங்குகள் பங்கெடுத்திருந்தன. அதில் முதலாமிடம் பெற்றுக்கொண்ட 143 மாணவர்களுக்கு அக்கலையரங்கில் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு பங்கு மக்கள், மறைக்கோட்டக் குருக்கள், அருட்சகோதரிகள், பங்குமக்கள் மற்றும் மறைக்கோட்டத்திலிருந்து வந்த பங்குமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்வையும் பணியையும் சித்தரிக்கும் அஞ்சலிப் பாடல் ஒன்று அருட்தந்தை அருட்செல்வன் அடிகளாரால் எழுதப்பட்டு, மல்வம் திருக்குடும்ப ஆலயப் பாடகர் குழாமினால் பாடப் பட்டு, திரு. ஜேசுதாஸ் அவர்களால் இசையமைக்கப் பட்டது. அப்பாடல் அந்நிகழ்வின் ஆரம்பத்தில் ஒலிக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சுவாமி ஞானப்பிரகாசரின் கைகளால் திருமுழுக்குப் பெற்று பெயர்சூட்டப்பட்ட தாயார் ஒருவர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தமை சிறப்புப் பெற்றது.

## நத்தார் செவ்வி

இலங்கை வானொலியிலும் ரூபவாஹினித் தொலைக்காட்சியிலும் பலவருடங்களாக ஊடகப் பணிபுரிந்த திரு.வி. என்.மதியழகன் நத்தார் விழாவையொட்டி அருட்பணி எஸ்.எம். செல்வரட்ணம் அ.ம.தி (கரவையூர்ச் செல்வம்) அடிகளாருடன் ஓர் சிறப்புச் செவ்வி ஒன்றினைக் கண்டுள்ளார். இச்செவ்வியானது நத்தார் தினமாகிய 25.12.2025 அன்று இரவு 7.00 மணிக்குடான் ரீவி, கோலி மேரி அலை வரிசையில் ஒளிபரப்பாகின்றது.

## 2025 யூபிலி ஆண்டு

(16ம் பக்கத் தொடர்ச்சி)

புனித பேதுரு பெருங்கோவிலில் 2024ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24ஆம் திகதி மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட யூபிலிக் கதவும் வருகின்ற 2026ஆம் ஆண்டு தை மாதம் 06ஆம் திகதி திருக்காட்சி பெருவிழாவன்று திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களால் பூட்டப்படவுள்ளது. அத்துடன் கடந்த வருடம் யூபிலி ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நாளில் ஆயர் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட யூபிலிச்சிலுவை யாழ். மறை மாவட்டத்தின் எல்லாப் பங்குகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு தற்பொழுது இறுதியாக பருத்தித்துறை மறைக்கோட்டப் பங்குகளில் ஆராதிக்கப்படும் இவ்வேளையில் வருகின்ற 28ஆம் திகதி அத்திருச்சிலுவை மரியன்னை பேராலயத்துக்கு எடுத்து வரப்பட்டு மரியன்னை பேராலயத்தில் பொருத்தமான இடத்தில் நிரந்தமாகக் கொலுவேற்றப்படுமெனவும் குருமுதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## யாழ் ஆயரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயற்கைப் பேரழிவுகள் நமது தாய்நாட்டைக் கடுமையாகத் தாக்கியுள்ளன. பலர் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர், எண்ணற்ற குடும்பங்கள் தங்கள் வீடுகள், உடமைகள், வாழ்வாதாரங்களை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். மனிதனால் ஏற்பட்ட போர் போன்றது அல்ல இது. இயற்கையே மனிதனைக் காயப்படுத்தியுள்ள இந்நிகழ்வு, நமது மனதை ஆழமாக வலிக்கச் செய்கிறது. துயருறுபவர்களுடன் நாம் துயருறுகிறோம், உயிரிழந்தவர்களை ஆண்டவரின் இரக்கத்தில் ஒப்படைக்கிறோம்.

35 ஆண்டுகளுக்கும் மேலான உள்நாட்டுப் போரின் வேதனையை அனுபவித்த மக்கள் நாம். மரணம், இடம்பெயர்வு, பயம், இழப்பு இவை அனைத்தையும் நாம் அறிவோம். ஆனால் அந்த இருண்ட காலங்களிலும், ஆண்டவர் இயேசு நம்மோடு இருந்தார். அவர் நம்மைக் கைவிடவில்லை. இன்று, இந்த இயற்கைப் பேரிடரின் நேரத்திலும், அதே நம்பிக்கையுடன் நாம் கூறுகிறோம் “இயேசு நம்மோடு” இம்மானுவேலாகவுள்ளார்.

கிறிஸ்மஸ் என்பது தொலைவில் இருக்கும் ஒரு இறைமகனை அல்ல, மனித வேதனையின் நடுவே பிறந்த ஒரு இறைமகனை நமக்கு நினைவூட்டுகிறது. ஏழ்மையில், தஞ்சமின்றி, ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசு, இன்று வீடிழந்தவர்களோடும், துயருறுபவர்களோடும், அகதிகளோடும் இருக்கிறார்.

இவ் யூபிலி ஆண்டில் நமக்கு கிறிஸ்மஸ் கூறும் செய்தி இதுவாகும். இறைமகன் துன்புறுவோருடன் வாழ வருகிறார். கிறிஸ்மஸ் என்பது கொண்டாட்டம் மட்டுமல்ல, பகிர்வின் அழைப்பாகும்.

இந்த நேரத்தில், நமது யாழ்ப்பாண மறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்படாமல் இருந்தாலும், இலங்கையின் பல மறைமாவட்டங்கள் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. ஆகையால், பாதிக்கப்பட்ட சகோதரர்களுக்கு உதவுவது ஒரு அவசரமான கிறிஸ்தவ கடமை. ஒவ்வொரு பங்கும், ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு நிறுவனமும், தங்களால் இயன்ற உதவிகளை - பொருள் உதவி, நிதி உதவி, இறைவேண்டல் எனும் கருணைச் செயல்களின் வழியாக ஏழை எளிய மக்களில் கிறிஸ்துவைக் காணவேண்டும்.

நாம் பகிரும் ஒவ்வொரு செயலும் “கிறிஸ்து இன்று பிறந்துள்ளார்” என்பதற்கான சாட்சியாக இருக்கட்டும். நாம் அனைவரும் “நம்பிக்கையின் திருப்பயணிகளாக” மாறுவோம். இருளில் ஒளியாகவும், துயரில் ஆறுதலாகவும்,தனிமையில் துணையாகவும் இருப்போம். ‘

பெத்லகேமில் பிறந்த அமைதியின் அரசர், குழந்தை இயேசு, நமது தாய்நாட்டை ஆசீர்வதிப்பாராக. உயிரிழந்தவர்களுக்கு நித்திய ஓய்வையும், துயருறுவோருக்கு ஆறுதலையும், அகதிகளுக்கு பாதுகாப்பையும் அளிப்பாராக. வேதனை அறிந்த அன்னை மரியாள், எல்லாத்துன்புறும் குடும்பங்களுக்காக பரிந்துரைப்பாராக இந்த புனிதமும் நம்பிக்கையுமுள்ள கிறிஸ்மஸ் விழா நம்மை அன்பிலும் ஒற்றுமையிலும் தாராளப் பகிர்விலும் வளரச்செய்யட்டும். இறை ஆசீருடன் மலரும் புத்தாண்டில் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

# உணர மறுக்கும் அரசியல் தலைவர்கள்



அ.நிக்ஸன்

**1948 இல் இருந்து தமிழர்களை ஒடுக்குவதற்கு இராணுவ ரீதியான திட்டங்களை தீட்டினார்களே தவிர, ஒட்டுமொத்த இலங்கைத்தீவை முன்னேற்ற எந்தவொரு திட்டங்களும் வகுக்கவில்லை என்ற உண்மை இப்போது புலப்படுகிறது அல்லவா?**

புதிய ஆண்டு பிறக்கவுள்ளது. இந்த நத்தார் பண்டிகைக் காலத்தில் பல விதமான சிந்தனைகள் எழும். ஆனாலும் எமது அரசியல் உரிமைகள் பற்றிய விவகாரம் ஒவ்வொரு ஆண்டும் அதே நிலையில்தான் சென்று கொண்டிருக்கும் என்பது பட்டவர்த்தனம்.

இப் பின்னணியில்தான் மீண்டும், மீண்டும் சிங்கள அரசியல் தலைவர்கள் தவறு இழைக்கிறார்கள். 1948 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பில் இருந்து இன்றைய அரசியல் யாப்பு வரையும், சிங்கள பௌத்த சமயத்தை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தான், இலங்கைத்தீவு இன்று எதிர்கொள்ளும் அத்தனை பிரச்சினைகளுக்கும் காரண - காரியம் என்ற உண்மையை இவர்கள் எப்போது சிங்கள மக்கள் முன்னிலையில் துணிந்து சொல்லப் போகின்றனர்?

ஆனால் -இது தான் உண்மை என்பதை ஏற்கவோ நம்பவோ எந்த ஒரு சிங்கள அரசியல் தலைவர்களும் தயாராக இல்லை.

இடதுசாரி - மாக்சியம் என்று சொல்லிக் கொண்டு வந்த அனுரகுமார திஸாநாயக்கா கூட பௌத்த பீடத்தை மீறிச் செயற்படும் நிலையில் இல்லை என்பதும் தற்போது அம்பலப்பட்டுள்ளது.

1980 களில் இருந்து அதாவது, போர்க்காலத்தில் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்றும் தமிழ் இனவாதம் எனவும் முத்திரை குத்தி, சர்வதேச நாடுகளுக்கு இல்லாத பொல்லாத கதைகள் கூறி, 2009 இல் போரில் அனைத்தையும் இல்லாது ஒழித்தார்கள்.

அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு ராஜபக்ச குடும்பம் மீது குற்றம் சுமத்தி, தமிழர்களை ஒடுக்குவதற்கு மேற்கொண்ட அத்தனை இன அழிப்பு திட்டங்களையும் மூடி மறைத்தார்கள்.

இப்போது "டித்வா " புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அனுரகுமார திஸாநாயக்க மீது பழிசுமத்தி, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற சிங்கள எதிர்க்கட்சிகள் முரண்பாட்டில் உடன்பாடாக ஒன்று சேர்கின்றன.

"டித்வா" புயல் பாதிப்புகளை தடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

ஆகவே - சந்திரிகா, ரணில், மகிந்த, அனுர போன்ற சிங்களத் தலைவர்கள் உலகத்துக்கும் சிங்கள மக்களுக்கும் மூடி மறைக்கும் உண்மை எது என்று இப்போது புரிகிறதல்லவா?

2004 இல் சுனாமி அழிவுகளை மீளக் கட்டியெழுப்பப் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முற்பட்டபோது ஜேவிபி அதனைத் தடுத்து நிறுத்தியது.

சுனாமி அவலங்கள் - உயிரிழப்புகள் போன்ற வற்றிற்கு மத்தியில் கொழும்பில் பெரும் போராட்டத்தை ஜேவிபி நடத்தியிருந்து.

மறைமுகமாக சந்திரிகா, ரணில் ஆகியோரும் அப் போராட்டத்தை ஆதரித்திருந்தனர் என்பதே உண்மை. தமிழர்களுக்கு ஏதேனும் ஒரு அரசியல் தீர்வு என்று வரும் போது கொழும்பில் பெரும் அரசியல் குழப்பங்கள் - பொருளாதார நெருக்கடிகள் வந்துவிடும்.

இப்போது "டித்வா " புயலைப் பயன்படுத்தி இலங்கையின் ஒற்றுமை - இலங்கையின் இறைமை - பொருளாதார முன்னேற்றம் அது இது என்று எத்தனை கதைகளை அனுர அரசாங்கம் சர்வதேச நாடுகளிடம் அவிழ்த்து விடுகின்றது.

ஆகவே -1948 இல் இருந்து தமிழர்களை ஒடுக்குவதற்கு இராணுவ ரீதியான திட்டங்களைத் தீட்டினார்களே தவிர, ஒட்டுமொத்த இலங்கைத் தீவை முன்னேற்ற எந்தவொரு திட்டங்களையும் சிங்களத் தலைவர்கள் வகுக்கவில்லை என்ற உண்மை இப்போது புலப்படுகிறது அல்லவா?

2009 இற்குப் பின்னர் கூட மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றதே தவிர, இனப்பிரச்சினை என ஒன்று இருக்கிறது, முதலில் அதற்குத் தீர்வைக் காண வேண்டும் என்ற சிந்தனை எந்த ஒரு சிங்களத் தலைவர்களிடமும் இல்லை என்பதும் புரிகிறது அல்லவா?

அரசியல் - பொருளாதார முறைமைகளில் தமிழ் முஸ்லிம் மக்களை இணைக்க வேண்டும் என்ற நோக்கம் கூட இல்லை என்பதும் தெரிகிறது அல்லவா?

அப்படி இல்லையேல். விடயதானத் தோடு தொடர்பு இல்லாத சில தமிழர்களை சும்மா ஒப்பாசாரத்துக்காக இணைப்பார்கள். எங்காவது ஒரு தமிழன், சிங்களம் ஆங்கிலம் பேசினால், அவனது பெயரை ஏதாவது ஒரு குழுவில் இணைத்துவிட்டு ஜெனீவாவுக்குக் கணக்கு காட்டுவார்கள்.

இனப்பிரச்சினைத் தீர்வு உள்ளிட்ட பல விவகாரங்களில் ஜெனீவா போன்ற சர்வதேச சமூகத்துக்குப் பொய்யான கணக்கு களையும், பொய்யான முகங்களையும் காண்பித்து, அதற்கு ஏற்ப பொய்யான அறிக்கைகளை யும் தயாரிப்பதில் சிங்கள அரசியல் தலைவர்கள் வல்லவர்கள்.

ஆனால், காலத்துக்குக் காலம் சர்வதேசத்துக்குக் காண்பிக்கத் தயாரிக்கும் பொய்யான அறிக்கைகள், பொய் முக நடவடிக்கைகள் எதுவும், இலங்கைத்தீவின் முன்னேற்றத்திற்கு உதவாது என்ற உண்மையை சிங்களத் தலைவர்கள் அனைவரும் உணரும் வரை, பொருளாதார பலவீனம் இலங்கைத்தீவில் தொடர்கதை தான் என்ற உண்மையை இவர்கள் அறியாமல் உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபைக்கும் மற்றும் இலங்கைக்கு நிதியுதவி வழங்கி வரும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி பாரிஸ் கிளப் போன்ற அமைப்புகளுக்கும் அமெரிக்க, இந்திய மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கும் சிங்கள அரசியல் தலைவர்களின் மூடி மறைப்புகள் - திருகுதாளங்கள் தெரியாமலில்லை.

ஆனால், புவிசார் அரசியல் - பொருளாதார போட்டிச் சூழலில் அதுவும் இந்து சமுத்திரத்தில் இலங்கை என்ற தளம் இவர்களுக்கு அவசியம் என்பதால், ஏட்டிக்குப் போட்டியாக "இலங்கை ஒற்றை ஆட்சி அரசு" என்ற கருத்தியலை நியாயப்படுத்தி வருகின்றனர்.

அதேநேரம், காலத்துக்குக் காலம் ஏதேனும் ஒரு சிங்களத் தலைவர்களை நம்புகின்ற சில தமிழ்த் தலைவர்கள். குறிப்பாக, சந்திரிகா, ரணில், அநுர போன்ற தலைவர்கள் நல்லவர்கள் என்ற கதைகளை கூறுகின்ற தமிழ்த்தேசியக் கட்சிகளும் தமிழர்களின் தற்போதைய தனிமைப்பட்ட நிலைமைகளுக்குப் பிரதான காரணம்.

தேர்தல் அரசியலில் மாத்திரம் தங்கியிருந்து தமிழ்த்தேசிய அரசியலை நகர்த்த முடியாது என்பதைப் பல தடவைகள் இடித்துரைத்து எழுதியிருந்தாலும், தமிழ்க் கட்சிகளின் நோக்கம் நாடாளுமன்றக் கதிரைகள் மாத்திரமே.

ஆனால், தேர்தல் அரசியல் - நாடாளுமன்றக் கதிரைகளை கடந்து இளம் சமூகம் ஜனநாயக வழியில் வியூகங்களை வகுக்கின்ற காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

## ஆசியருளும் பாலகனே

தரணியை மீட்பதற்காய்
தாழ்மையின் உறைவிடமாய்
மார்கழி கடும்குளிரில்
மாடடை குடிலினில்
மரியன்னை மடியில்
அமைதியின் அரசராய்
அகிலத்தில் பிறந்தவரே

நன்னெறியில் மாந்தரை மீட்டிட
துன்பங்களைக் களைந்திட
துயரங்களைத் தகர்த்திட
வழிகாட்டும் தூய ஒளியாக
அமைதியின் விடியலென
அனைவரையும் மீட்டெடுக்க
அவனியில் அவதரித்தவரே

பூவுலகின் வாழ்வியலால்
அவலங்களில் அல்லலுறுவோரை
உம் ஓரவிழிப்பார்வையினால்
அன்புடன் உற்றுநோக்கி
ஆதரித்து அனைவருக்கும்
நிறையாசீர் வழங்கிடுவீர்
எம் மீட்பின் பாலகனே

சேரரூபன் ஷெர்வின்

# புத்தாண்டில் அன்னை மரியாவின் பாதுகாவல்

ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் போது, நமக்கு நம்பிக்கை தருவது அன்னை மரியாவின் பாதுகாவல்தான். திருஅவை ஆண்டில் முதல் நாளில், "கடவுளின் தாய் புனித மரியா" என்று விழா எடுத்து அன்னை மரியாவின் பரிந்துரையால் நாம் ஆண்டு முழுவதும் நிறைவோடு வாழமுடியும் என்று நமக்குக் கற்பிக்கின்றது. சென்ற 2025 ஆம் ஆண்டை இந்த நம்பிக்கையோடு தொடங்கினோம். ஆனால் இயற்கை அனர்த்தத்தாலும், வெள்ளப் பெருக்கினாலும், மண்சரிவினாலும் வாழ்வின் பொருளை இழந்தனர். இனிவரும் ஒவ்வொரு புத்தாண்டும் நமக்கு ஒளிமிக்க பயனுள்ள, நன்மை பயக்கும் ஆண்டாக அமைய வேண்டும். அதற்காக இறைவனிடம் இறைஞ்சுவோம். அன்னை மரியாவின் பரிந்துரையை நாடுவோம்.

### ஒவ்வொரு நாளும் அன்னை மரியாவின் பரிந்துரை

திருஅவை ஒவ்வொரு நாள் திருப்பலியிலும் அன்னை மரியாவின் பரிந்துரையை வேண்டுகிறது. ஒவ்வொரு மாதமும் குறைந்தது நினைவுகூர்ந்து நற்கருணை மன்றாட்டில் தாய் மரியாவின் அன்னைக்குப் புகழ் சேர்ப்பதோடு, அந்தத் தாயின் பரிந்துரையைத் ஒரு நாளாவது அன்னை மரியாவுக்கு விழாவை ஏற்படுத்தி, திருஅவை பணிந்து மன்றாடுகிறது. மேலும் புனிதர்களின் விழாக்கள், ஆண்டவர் இயேசு விழாக்கள் இல்லாத சனிக்கிழமைகளில் அன்னை மரியாவை மகிமைப்படுத்தும் விதத்தில் அன்னை மரியாவின் பெயரால் திருப்பலி நிறைவேற்ற திருஅவைத் நம்மை தூண்டுகிறது. இவ்வாறு ஆண்டின் ஒவ்வொரு நாளும் அன்னை மரியா நமக்காக இறைவனிடம் வேண்டி, நமக்குத் தேவையான அருளைப் பெற்றுத் தருகிறார். எனவே நாம் எதற்கும் அஞ்ச வேண்டிய தேவையில்லை.

### புதிய ஏற்பாட்டில் அன்னை மரியா

அன்னை மரியாவைப் பற்றிய குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் மிகக் குறைவாகவே உள்ளன. மரியாவைப் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் மத்தேயு மற்றும் லூக்கா எழுதுகின்ற இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்வுகளில் (மத் 1-2 லூக் 1-2) காண்கின்றோம். மேலும் மரியாவைப் பற்றி மாற் 3:31-35 மத் 12:45-50 லூக் 8:19-21 11:27-28 யோவா 2:1- 12 19:25-27 திப 1:14 கலா 4:4 போன்ற பகுதிகளில் சில குறிப்பு-களைப் படிக்கின்றோம். புதிய ஏற்பாட்டில் மரியாவைப் பற்றிய கருத்துகள் குறைவாக இருந்தாலும் தொடக்கத் திருஅவை அன்னை மரியாவுக்கு மிகுந்த முக்கியத்-துவம் கொடுத்து. மரியா ஆண்டவரின் தாயாகவும், நம்பிக்கையின் தாயாகவும், கிறிஸ்தவ வாழ்வின் முன்மாதிரியாகவும் திருஅவையின் தாயாகவும் தொடக்கத் திருஅவை ஏற்றுக்கொண்டது. நாமும் மரியாவை நம் தாயாக ஏற்றுக்கொள்வோம்.

### அல்லலில் உதவும் மரியா

ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றத்திற்குப்பின் இயேசுவின் சீடர்கள் தளர்வுற்று வாழ்ந்தபோது, தாய் மரியா அவர்களோடு இணைந்து இறைவனிடம் வேண்டி (திப 1:14) சீடர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். திருமண வீட்டில் இரசம் தீர்ந்து விட, மரியா அக்குடும்பத்தின், அவமானத்தை நீக்க தனது மகனிடம் பரிந்து பேசுகிறார் (யோவா 2:3-5). யாருடைய உதவியுமின்றி தவித்த எலிசபெத்தை மரியா சந்தித்து அங்கு ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்து (லூக் 1:39-56) அவருக்கு உதவினார். இன்றும் அன்னை மரியா நமக்காக நம்முடைய தேவைகளில் பரிந்து பேசுகிறார்.

**ஆண்டவருடைய பிறப்பின்**
**எட்டாம் நாள்**
**புனித கன்னி மரியா - கடவுளின் தாய்**

### "ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" (லூக் 1:28)

அன்னை மரியாவுக்கு வானதூதர் சொன்ன வாழ்த்துகளில் ஒன்றுதான், "ஆண்டவர் உம்மோடு இருக்கிறார். நமது வழிபாடுகளில் "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என ஆசி கூறுவதை நாம் கேட்டு, அதனால் பலனும் ஆசீரும் பெற்றிருக்கின்றோம். இயேசுவின் காலத்தில் யூதமக்கள் தங்கள் வழிபாட்டிலும் அன்றாட வாழ்விலும் இந்த ஆசியுரையை பயன்படுத்தினார்கள். "ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்பதன் பொருளைக் கீழே காண்போம்.

> "மரியா
> ஆண் துணையின்றி
> 'கன்னி' என்ற நிலையில்
> கடவுளின் மகனைப்
> பெற்றெடுக்க வேண்டும் என்பது
> இயற்கை தாண்டிய செயல். இது
> மனித ஆற்றலால்
> இயலாத ஒன்று.
> எனவே, இந்தச் சவால்மிக்க
> இறைத் திருவுளத்தை
> மரியா நிறைவேற்ற
> அழைக்கப் பெற்றபோது
> 'ஆண்டவர் உங்களோடு இருக்கிறார்'
> (லூக் 1:28)
> என்ற ஆசியை
> இறைவன் மரியாவுக்குக் கொடுத்தார்."

### சவால் நிறைந்த செயலைச் செய்ய ஆண்டவரின் உடனிருப்புத் தேவை

பழைய ஏற்பாட்டில், இறைவன் மோயீசனை எகிப்தின் அடிமை தனத்திலிருந்து மக்களை விடுவிக்க அழைக்கும்போது, தான் மோயீசனோடு இருப்பதை உறுதிப் படுத்தினார் (விப. 3.12). அவ்வாறே யோசுவா யோர்தான் நதியைக் கடக்க வேண்டும் என்று சொன்னபோது இறைவன் தன்னுடைய உடனிருப்பை இவ்வாறு சொல்கின்றார்:

"வீறுகொள்! துணிந்து நில்! அஞ்சாதே! கவலைப் படாதே! உன் கடவுளும் ஆண்டவருமான நான் நீ செல்லும் இடம் உன்னோடு இருப்பேன்" (யோசு 1:9). கிதியோன் மிதியானியர்களிட கையிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்றபோதும் ஆண்டவரின் உடனிருப்பு கிதியோனிடம் உள்ளது என ஆண்ட-வரின் தூதர் உறுதிப்படுத்தினார் (நீதி 6:12). அரசர் சவுல் தாவீதை கோலியாத்தை எதிர்த்துப் போரிட அனுப்பிய போதும் "சென்று வா! ஆண்டவர் உன்னோடு இருப்-பார்" (சாமு 17:37) என ஆசி கூறினார். இவ்வாறு சவால்மிக்க செயல்களை ஆற்றிட இறைவன் பல்வேறு நபர்களுக்குத் துணை நின்றார்.

### இறை பணியில் ஆண்டவரின் உனிருப்பு

ஆண்டவர் மோயீசனைத் தன் பணிக்கென அழைக் கும்போது அழைக்கும்போது



ஆண்டவரின் உடனிருப்பு உண்டென தெளிவுப்படுத்தி-னார் (விப.3:12, வி.ப.33:14). எரேமியாவைத் தன் பணிக்காக இறைவன். அழைக் கும்போது "நான் உன்னோடு இருக்கின்றேன்" (எரே 18)என்று அழைத்தார்.

இயேசு தன் சீடர்களைத் தனது பணிசெய்ய அழைத்தபோதும் "இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன் " (மத். 28:19, 20) என்று அவர்களைத் திடப்படுத்தினார்.

### ஆண்டவரின் உடனிருப்பு மரியாவோடு இருந்தது

மரியா ஆண் துணையின்றி "கன்னி" என்ற நிலையில் கடவுளின் மகனைப் பெற்றெடுக்க வேண்டும் என்பது இயற்கை தாண்டிய செயல். இது மனித ஆற்றலால் இயலாத ஒன்று. எனவே, இந்தச் சவால்மிக்க இறைத் திருவுளத்தை மரியா நிறைவேற்ற அழைக்கப் பெற்றபோது "ஆண்டவர் உங்களோடு இருக்கிறார்" (லூக் 1:28) என்ற ஆசியை இறைவன் மரியாவுக்குக் கொடுத்தார்.

"ஆண்டவர் உம்மோடு" என்று சொல்லப்பட்ட வாக்குறுதி மரியாவிடம் நிறைவேறியது. அன்னை மரியா கருவுற்று இயேசுவைப் பெற்றெடுத்தார். இயேசு அன்னை வாழ்ந்த சூழலில் மனித இயல்புகொண்ட குழந்தையாக, சிறுவனாக, இளைஞனாக, முப்பது வயதுவரை மரியாவில் இல்லத்திலே வாழ்ந்தார். இவ்வாறு "ஆண்டவர் உம்மோடு" என்ற வாக்குறுதி மரியாவில் நிறைவேறியது.

### அன்னை மரியா இறைவனின் உடனிருப்பை உணர்ந்தவர்

அன்னை மரியா பிறப்பிலிருந்தே இறைவ-னின் உடனிருப்பை உணர்ந்தவர். சிலுவையின் அடியில் நிற்கும்போதும் இறைவனின் உடனிருப்பை உணர்ந்ததால் துயரங்கண்டு துவண்டுவிடாமல் நிலைத்து நின்றவர். ஆண்டவர் இயேசுவை விட்டு அகன்றுவிடாமல் இயேசுவின் சீடர்களையும் இணைத்து இயேசு விட்டுச் சென்ற மதிப்பீடுகளின்படி நடந்து, வாழ்வில் நிலைத்து நின்று இறைவனின் உடனிருப்பை மரியா உணர்ந்து வாழ்ந்தார்.

### நமது வாழ்வில்

புத்தாண்டில் புத்துணர்வு பெற்று எழுவோம். அன்றாடம் அன்னை மரியா நமக்காக இறைவனி டம் மன்றாடி வரங்களைப் பெற்றுத் தருவது போல, நாமும் பிறர் துயர் நீக்க தேவையான உதவிகளைப் பிறருக்குத் திறம்பட செய்ய வேண்டும். பிறருடைய இடுக்கண்களைக் களைவது நமது கடமையென ஏற்றுக்கொள்வோம். புத்தாண்டில் மரியாவின் பாதுகாவல் நமக்கு உண்டு என்ற நம்பிக்கையில் வாழ்வோம். ஆண்டின் எல்லா நாட்களும் நமக்கு இனிமையான நாட்களாக அமையட்டும்.




கரவையூர்ச் செல்வம்

இத்திங்கள் (மார்கழி) செவ்வாய்க்கிழமை ஒன்பதாம் திகதி காலை 10.00 மணியளவில் பழைய நண்பரொருவ என்னைச் சந்திக்கத் தனது மனைவியுடன் வந்தார் (முன் அறிவிப்புடன்). நான் பழைய நண்பர் என்று குறிப்பிட்டது ஏனென்றால் 1970 களின் இறுதி ஆண்டுகளில் (கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள்) இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தில் இவரைச் சந்தித்தேன். அப்பொழுது கத்தோலிக்க நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருக்கும்படி மறைந்த கருதினால் தோமஸ் ஆண்டகையால் நான் பணிக்கப்பட்டேன். அமலமரித் தியாகிகள் மாகாண (அப்பொழுது ஒரு மாகாணம்) முதல்வரின் அனுமதியுடன் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

வந்த நண்பர் வி.என்.மதியழகன். அந்தக் காலத்து அனுபவங்களை மீட்டு உரையாடினோம். அப்பொழுது அவர் கூறி-னார் "கத்தோலிக்க நிகழ்ச்சி என்ற பெயரை நீக்கி, புதிய உலகம்" என்று பெயரிட்டு, ஒரு சஞ்சிகை வடிவில் நீங்கள் அந்த நிகழ்ச்சி-களைத் தொகுத்து வழங்கினீர்கள். கிறிஸ்-தவ மொழியை மாற்றி (அந்த நேரம்) நல்ல தமிழில் எல்லோரையும் கவர்ந்தீர்கள். கொழும்பில் பல்வேறு தமிழ் மேடைகளில் உங்கள் குரல் கம்பீரமாக ஒலித்தது. இளை ஞர் கூட்டமொன்று உங்களைப் பின் பற்றினார்கள். உங்களை, தமிழ்ச் சேவை யில் பணிபுரிந்த பலர் உன்னிப்பாகப் பார்த்தார்கள், வியந்தார்கள். அதில் நானு மொருவன். வேறுபல நிழக்ச்சியில் பங்கு கொள்ளத் தயாரிப்பாளர்கள் உங்களை அழைத்தார்கள். உங்களை நாங்கள் "புரட்சித் துறவி" என்றழைத்தோம்.

### மகிழ்ச்சியும் கேள்வியும்

இவற்றைக் கேட்டபொழுது ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி. மறுபக்கத்தில் ஒரு கேள்வி. உண்மைதான். புதிய உலகம் என்ற நிகழ்ச்சியை புதுமையாகத் தயாரித்து ஒலிபரப்பினேன். திங்கள் தோறும் வெளி-வரும் ஒரு சஞ்சிகையையும் (அப்பொழுது யாழ். மறைமாவட்ட ஆயருக்கு செயலாளராகக் கடமையாற்றிய அருட்பணி கிங்ஸ்லி சுவாம் பிள்ளை அவர்களின் அனுசரணையுடன் நடத்-தினேன். எங்கும் எதிலும் "புதிய உலகம்" .

> **ஒரு கொடிய போரினூடாக ஏனோதானோ என்று எம்மில் சிலர் பிழைத்து விட்டோம். ஆனால் இலட்சக்கணக்கான எமது இனத்தவரை, உறவுகளை இழந்தோம். கையைக் கட்டி, வயிற்றைக் கட்டி சேமித்தவற்றை இழந்தோம். எங்கள் உழைப்பில் கட்டிய வீடுகள் தரைமட்டமாகின. இவ்வளவும் போதாதென்று, பனையால் விழுந்தவனை மாடேறி மித்ததுபோல சுற்றுச் சூழலும் வெளிகொண்டு எங்கள் மேல் சீறிப் பாய்கின்றது.**

ஐம்பது ஆண்டுகளினூடாகப் பின் நோக்கிப் பார்க்கின்றேன். ஒரு புதிய உலகமும் உதயமாகவில்லை! மாறாக, புதிய கொலைகள், புதிய களவுகள், புதிய பொய்கள், புதிய போதைகள் என்று வளர்ந்து தமிழ்க் கலாசாரத்தை அழிந்து விட்டன. கல்வியை வணிகமாக்கினோம். மருத்துவத்தை வணிக மாக்கினோம், ஆசிரியர்கள் வேலியே பயிரை மேய்வதாக மாறிவிட்டார்கள். வன்புணர்வு கட்ட விழ்க்கப்பட்டு விட்டது. ஒரு கொடிய போரினூடாக ஏனோதானோ என்று எம்மில் சிலர் பிழைத்து விட்டோம். ஆனால் இலட்சக்கணக்கான எமது இனத்தவரை, உறவுகளை இழந்தோம். கையைக் கட்டி, வயிற்றைக் கட்டி சேமித்தவற்றை இழந்தோம். எங்கள் உழைப்பில் கட்டிய வீடுகள் தரைமட்டமாகின. இவ்வளவும் போதாதென்று, பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல சுற்றுச் சூழலும் வெறிகொண்டு எங்கள் மேல் சீறிப் பாய்கின்றது.

குரல் ஒன்று கேட்டது. ஓர் எதிர்மறைச் சிந்தனையில் தோய்ந்தவேளை குரலொன்று கேட்டது. எங்கோ படிந்த அல்லது கேட்ட குரல். ஆங்கிலத்தில் கேட்டது, Make All thing New நூலொன்றில் படித்ததா? அல்லது விவிலியத்தில் கேட்டதா? தேடினேன். கண்டேன். திருவெளி பாட்டு நூலில் "இதோ1 நான் அனைத்தையும் புதியது ஆக்குவேன்" (21:5), ஓர் இனமறியாத புத்துயிர் தோன்றியது. இந்த வரியின் பின்னணி யென்ன? கி.பி 89 - 96ம் ஆண்டுகளாக இருக்-கலாம். உரோமைப் பேரரசர் சீசரையே வணங்க வேண்டுமெனக் கிறீஸ்தவர்கள் வலியுறுத்தப் பட்டனர். கிறீஸ்தவர்கள் வெறுப்புக்கும் இகழ்ச்சிக் கும் இன்னலுக்கும் உள்ளடக்கப்பட்டனர். இப்படிப் பட்ட சூழலில் கிறித்தவர்களுக்கு நம்பிக்கையூட்ட இந்த வரிகள் எழுதப்பட்டிருக்கலாம். நேரடியாக நம்பிக்கையூட்டப் பயந்து. பல்வேறுபட்ட அடை யாளங்களைப் பயன்படுத்தி நம்பிக்கையூட்ட முனைந்திருக்கலாம்.

இன்று அந்த வரியைப் படிக்கும்பொழுது, அந்த வரி ஒரு நம்பிக்கை வரியாக மட்டுமல்ல, இன்றைய உலகின் பின்புலத்தில் அதுவும் எங்கள் நாட்டின் பின்புலத்தில் ஒரு தேவையென நான் பார்க்கின்றேன். அதுவும் ஓர் அவசியத் தேவை.

### எனது சிந்தனையின் சூழல்

இன்று நான் பேசும் ஆன்மிகம் பரிணாமச் சூழலமையில் தேடுவது. அதாவது பிரபஞ்சத்தைக் கடவுள் புறத்தே இருந்து படைத்தார் என்ற நீண்ட காலச் சிந்தனையில் இருந்து பெயர்ந்து, இன்று பரிணாமத்தில் உள்ளிருந்து பிரபஞ்சத்தைப் பிறப் பிப்பவராகப் பார்க்கின்றேன். Comic Birther. இது ஒரு பாரிய சிந்தனைப் பெயர்வு.

தமிழ்ச் சொல் - கடவுள் - அனைத்தையும் கடந்து, அனைத்திற்குள்ளிருக்கும் ஒரு சக்தியெனப் பார்க்கின்றேன். இந்தச் சக்தி பிரபஞ்சமானது The Universal Force of Love என்று சென்ற நூற்றாண் டின் தலைசிறந்த விஞ்ஞானி அல்பேர்ட் ஐயின்ஸ் ரைன் கூறினார். இந்த அன்பின் பிரபஞ் சத்தின் சக்தி பிறப்பித்துக்கொண்டே இருக்கும். இந்தப் பரி ணாமத்தின் வாழ்வுப் படிமத்தில் இருந்து தான் மனிதர் முகிழ்ந்தெழுந்தார்கள். Emergent என்ற விஞ்ஞானச் சொல்லை நான் தமிழில் முகிழ்ந் தெழுதல் என்று மொழிபெயர்த்துள்ளேன்.

### முகுந்தெழுதல்

பன்முகத் தன்மையுடைய எளிமையான செயல் எதிர்ச்செயல்களில் இருந்து சிக்கலான அமைப்புகளும் வடிவங்களும் எழுகின்றன. முகிழ்ந் தெழுதல் ஒரு புதியதைச் சுட்டிக்காட்டினாலும், முன்பிருந்த அமைப்புகளில் இருந்து முற்றாக வேறுபட்டவையல்ல. அதனாலேயே பரிணாமம் என்று கூறுகின்றோம். பழமைக் கும் புதுமைக் குமிடையே ஒரு தொடர்புண்டு.

### பரிணாமத்தில் மனிதர்

பரிணாமத்தில் பரிண மித்த மனிதர் களை, ரெயில் காட்டி சாடான் (சேசு சபையைச் சார்ந்த ஓர் இறையியலாளரும், விஞ்ஞானியும், மெய்யானியுமானவர்) மூன்று வகை யாகப் பார்க்கிறார்.

1. பரிணாம வளர்ச்சியின் அம்பு. அம்பு என்ற சொல்லை உருவகமாகக் கூறு கிறார். பொருள் : எதிர்காலத்தை நோக்கியது. மனிதர் எதிர்காலத்தை நோக்கியவர்கள்.

2. பரிணாம வளர்ச்சியின் சுய உணர்வுள்ள மனம் (Self - Conscious mind of Exluton) இது மனிதரின் ஒரு தனிச் சிறப்பு.

3. பரிணாம வளர்ச்சியின் திசையைப் பாதிக்கக்கூடி யவர். இந்தப் பாதிப்பு நன்மை நோக்கியும் அல்லது தீமை நோக்கியும் இருக்கலாம். பெரும்பாலும் தீமை நோக்கியதாகவே அமையும்.

இன்று இந்த நாட்டை உலுப்பிவிட்ட சூழ லின் வெறியைப் பின்புலமாகக் கொண்டு மேற் கூறிய மூன்றாவதைப் பார்ப்போம்.

### அடித்தால் அடிப்பேன்

மனிதர்களின் செயல்கள் சூழலை மாசு-படுத்துகின்றன. நாம் சூழலை அழிக்கின்றோம். சூழலைச் சுரண்டுகின்றோம். இராட்சத இயந்திரங் கள் கொண்டு சூழலை அழிக்கின்றோம். இத்தனை யையும் பொருளாதார முன்னேற்றம் என்ற பெயரி லேயே செய்கின்றோம். சூழலோடு இணைந்திருக்க வேண்டிய மனிதர், சூழலை எம்மில் இருந்து பிரித்துப் புறம்பாக்கிச் சூழலுடன் இருக்க வேண்டிய உறவைத் துண்டித்து விடுகின்றோம். கோபங் கொண்ட சூழல் எம்மேல் சீறிப் பாய்கின்றது. சூழல் எம்மைப் பழிவாங்குகின்றது.

"ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத் தைக் காட்டு" என்று இயேசு சொல்லியிருக்கலாம். நான் அவ்வழி செயற்படுவதில்லை. நான் விஞ் ஞான வழிநின்றுதான் செயற்படுவேன். ஒவ்வொரு செயலுக்கும் ஓர் எதிர்ச்செயல் உண்டு. அதுதான் என் வழி என்று சூழல் சூளுரைக்கின்றது.

"நீ என்னை அடித்தால் நானும் உன்னை அடிப்பேன். நீ என்னைச் சுரண்டினால் நானும் உன்னைச் சுரண்டுவேன்"பாரிய இயந்திரங் களைக் கொண்டு இயற்கையை அழிக்கிறாய். குண்டுகள் போட்டு நிலத்தை ஊடுருவுகின்றாய். நான் திருப்பி அடிப்பேன். மழையால், வெள்ளத்-தால், காற்றினால், மின்னல்களினால், இடி முழக்கங்களால், சுனாமிகளால், மண் சரிவுகளால் உன்னைப் பூண்டோடு அழிப்பேன். ஒட்டுமொ-த்த எனது பலத்தின் முன் உனது இயந்திரங்கள், உனது செயற்கைக் கருவிகள் அனைத்தும் தூசுடா! மனிதா தூசு. புரிந்துகொள். இன்றே மனம் மாறு. என்னுடன் உறவை வளர். என்னுடன் இணைப்பை ஏற்படுத்து. உனக்கு வாழ்வுண்டு. அன்றேல் நீ அழிவாய் மனிதா" என்று எச்சரிக்கிறது சூழல். செவிமடுப்போமா?

மனிதம் அழிகின்றது. இன அழிப்பை நோக்கிய போர்கள்; கொடிய போர்கள்! மனித ரையும் சூழலையும் அழிக்கும் பேரழிவு. ஆயுத உற்பத்தி, அவற்றை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இரத்தம் தோய்ந்த வணிகம், இனத் துவேசம், சமயத்துவேசம், பொருளாதாரப் பேராசை, ஏமாற்றல், கொலைகள், பாரிய களவுகள் என்று நாம் இந்த நூற்றாண்டில் ஒரு கேவலமான நிலையை அடைந்து விட்டோம். மறுக்க முடியுமா? மறைக்கமுடியுமா? இக் காலகட்டத்தில் தான் அந்தக் குரல் கேட்டது

(வளரும்...)

அன்பின் மகிழ்வு 39



# போதையற்ற தேசத்தை உருவாக்குவது நம் குடும்பங்களினதும் திருஅவையினதும் ஒரு புனித பொறுப்பு

.(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**4. திருஅவை வாழ்க்கையைக் குடும்பத்தின் மையக் கலாசாரமாக மாற்றுங்கள்**

பிள்ளைகளின் உள்ளத்தில் நற்பண்பு, ஒழுக்கம், தன்னடக்கம், பரிவு, கருணை, சமூகப்பணி, தெய்வபயம், என்ற கிறிஸ்தவ வாழ்வின் சிறப்பான அடிப்படைப் பண்புகளை மென்மையாக விதைக்கிறது. திருஅவை மறைக்கல்விக் கொள்கைத் திரட்டு கூறுவது போல, "குடும்பம் என்பது குழந்தைக்கு விசுவாசத்தின் முதல் பள்ளி." அங்கே அவர்கள் "இறைவனின் அன்பை அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். குடும்பம் மற்றும் திரு-அவை இரண்டும் இணைந்து குழந்தையின் இதயத்தில் வேரூன்றி நின்றால், தீமை-களை இல்லாமல் செய்வது இலகுவாகிறது. ஏனெனில் திருப்பலி, அருட்சாதனங்கள், செப வாழ்க்கை ஆகியவை குழந்தையின் உள்ளத்தில் அருளின் கவசத்தை உருவாக்குகின்றன. இது அவர்களை உலகின் ஏமாற்றங்களிலிருந்தும், அழுத்தங்களிலிருந்தும் காத்து, நேர்மை நிறைந்த பாதையில் நடத்துகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அழகாகச் சொல்கி-றார்: "கிறிஸ்துவின் அருகில் வளர்க்கப்படும் குழந்தை எந்த இருட்டிலும் தனியாக இருக்க மாட்டாது." கிறிஸ்து அருகில் இருக்கும்போது பயம் தூரமாகும். நல்லதைத் தேர்வு செய்யும் துணிவு பிறக்கும். வெளியில் குழப்பம் இருந்-தாலும் உள்ளத்தில் சமாதானம் நிலைக்கும். எனவே ஒவ்வொரு குடும்பமும் தங்கள் வீட்-டில் திருப்பலி விழிப்புணர்வு, காலை-மாலை செபம், பங்குச் சமூகத்தில் பங்கேற்பு, இரக்கச் செயல்கள், திருவிவிலிய வாசிப்பு இவற்றை ஒரு மையக் கலாசாரமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு திருஅவை வாழ்க்கை குடும்பத்தின் தினசரி மூச்சாக மாறும்போது, நம் பிள்ளைகள் சோதனைகளில் தடுமாறா-மல், கிருபையால் வழிநடத்தப்படுவார்கள்.

**5. வாழ்க்கை மூலம் கற்பிக்கும் சாட்சி பெற்றோர்**

குழந்தைகள் பெற்றோரின் வார்த்தைகளைக் காட்டிலும் அவர்களின் வாழ்க்கையை அதிகம் கவனிக்கிறார்கள். கற்பித்தல் என்பது மொழியால் மட்டுமல்ல அது வாழ்க்கைச் சாட்சியால் நடைபெறுகிறது. அதனால் பெற்றோர் தங்கள் வாழ்வில் கிறிஸ்துவின் நற்பண்புகளைப் பிரதிபலிக்க வேண்டியவர்கள். கிறிஸ்துவின் நற்பண்புகள் பெற்றோரின் உள்ளத்தில் ஒளிரும் போது, அது குழந்தைகளுக்கான முதல் நற்செய்தியாக மாறுகிறது. பெற்றோரின் வாழ்க்கையில் தெரிந்திருக்க வேண்டிய கிறிஸ்தவ குணங்கள்: நேர்மை, தியாக மனம் பொறுப்பு-ணர்வு, பணிவு, இரக்கம், தன்னடக்கம், மன்னிப்பு இவை அனைத்தும் சேர்ந்து குழந்தையின் உள்ளத்தில் கிறிஸ்து போன்ற மனிதநேயத்தை உருவாக்குகின்றன. திருஅவை போதிப்பதாவது, குடும்பமே குழந்தைகள் "கண்ணால் காணும் முதல் மறைக்கல்வி." பெற்றோரின் நடத்தை, ஆவி நிறைந்த சொற்கள், பணிவான அணுகுமுறை, நற்செயல்களின் சாட்சி இவை தெய்வீகக் கிருபையை விதைக்கும் முதற்கல்வி. அன்பு வீட்டில் இருந்தால், உலகம் அவர்களை எளிதில் ஏமாற்ற முடியாது. நேர்மை வீட்டில் கற்றுக் கொடுக்கப்பட்டால், பாவமும் தவறும் அவர்களைக் கவராது. பணிவு வீட்டில் வாழப்பட்டால், பெருமை அவர்களைத் திசைதிருப்பாது. தன்னடக்கம் வீட்டில் வளர்ந்தால், போதைப் பொருள் போன்ற தீமைகள் அவர்களை ஆட்கொள்ள முடியாது. குழந்தையின் உள்ளம் வெறும் அறிவால் அல்ல, அன்பின் சாட்சியால் மாற்றம் பெறுகிறது. பெற்றோர் கிறிஸ்துவின் வழியில் நடக்கும்போது, அவர்கள் பிள்ளைகளுக்கு "சத்தியமும் அன்பும் நிறைந்த வாழ்வு சாத்தியம்" என்பதைத் தங்கள் வாழ்க்கையால் கற்றுக் கொடுப்பார்கள். திருவிவிலியம் கூறுகிறது: "நீதிமான் நடக்கும் வழி அவரது பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் தரும்." (நீதிமொழிகள் 20:7) எனவே, பெற்றோரின் சாட்சி என்பது ஒரு சாதாரண பொறுப்பு அல்ல. அது தெய்வீக அழைப்பு, ஒரு கிறிஸ்தவ மிஷன், குழந்தையின் எதிர்காலத்தை நித்திய நன்மைக்குள் நடத்தும் ஒரு ஆன்மீக ஒளிக் கோப்பு.

**6. நண்பர்கள் வட்டம்: பெற்றோர் கவனிக்க வேண்டிய ஆன்மிக ரீதியான முக்கிய பகுதி**

ஒரு குழந்தையின் நண்பர்கள் வட்டம் என்பது அவனது குணாதிசயத்தையும், மனப்பாங்கையும், எதிர்கால நடைபாதையையும் ஆழமாக வடிவமைக்கும் உயிர்த்துணைச் சூழல். "நான் யாருடன் நடந்து கொண்டிருக்கிறேன்?" என்பது ஒரு இளைஞனின் வாழ்வின் தரத்தையும், நெறிமுறையையும், விசுவாசத்தையும் தீர்மானிக்கும் முக்கிய சக்தி ஆகும். திருவிவிலியம் எச்சரிக்கிறது: "தீய நட்புகள் நற்செயல்களைக் கெடுக்கும்." (1 கொரி. 15:33) எனவே குழந்தை யாருடன் நேரம் செலவிடுகிறது? யாரை முன்மாதிரியாகப் பார்க்கிறது? யார் அவனுக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றனர்? என்பதைப் பெற்றோர் அன்போடு கவனிப்பது கட்டுப்பாடு அல்ல அது ஒரு ஆன்மீகப் பாதுகாப்பு. பிள்ளைகளை வழிநடத்துவது பெற்றோரின் குரல், நண்பர்கள் வட்டத்தை வடிவமைப்பது பெற்றோர் மேற்கொள்ளும் மறைமுகத் தெய்வீகக் காவல் பணியாகக் திருஅவை கருதுகிறது. குழந்தைகளின் நண்பர்கள்: அவர்களின் சிந்தனையை வடிவமைக்கிறார்கள், அவர்களின் முடிவுகளைத் தீர்மானிக்கிறார்கள், அவர்களின் நெறிமுறையை முன்னெடுப்பார்கள் அல்லது பின்பற்றுவார்கள், அவர்களை நன்மைக்கோ தீமைக்கோ வழிநடத்துவார்கள். பரிவு, நற்பண்பு, விசுவாசம், ஒழுக்கம் கொண்ட நண்பர்கள் இருந்தால், குழந்தை அதே வழியில் வளர்வான். ஆனால் தவறான நடத்தையும், தீய பழக்கங்களையும் கொண்ட நண்பர்கள் இருந்தால், நற்சிந்தனைகளைச் சிதைக்கும் ஆபத்து உருவாகும். பெரியவர்கள் பிள்ளைகளுடன் உரையாட வேண்டும்: "உன் நண்பர்கள் யார்?" "அவர்கள் உன்னோடு நல்லபடியாக உறவாடுகிறார்களா?" "அவர்கள் உன் கனவுகளையும் நற்சிந்தனைகளையும் மதிக்கிறார்களா?" " அவர்களுடனான உனது நட்பில் அவர்கள் உன்னை உயர்த்துகிறார்களா, அல்லது தாழ்த்துகிறார்களா?" பெற்றோர் எப்போதும் நினைக்க வேண்-டியது: நண்பர்களைத் தேர்வுசெய்வதில் வழி-காட்டுவது கட்டாயம் அல்ல அது ஒரு கிறிஸ்தவத் தந்தை-தாயின் புனிதப் பொறுப்பு. பிள்ளைகள் நல்ல நண்பர்களுடன் இணைந்திருக்கும்போது: தவறான பாதைகளிலிருந்து தப்புவார்கள், ஒழுக்கத்தில் நிலைப்பார்கள், நன்மையைத் தேர்வு செய்வார்கள், கிறிஸ்துவின் ஒளியிலேயே நடைபோடுவார்கள். இதைத் திருஅவையின் செல்வாக்குள்ள புனிதர்களின் வாழ்க்கையிலும் நாம் காண்கிறோம்: நல்ல நட்புகள் கிருபையை வளர்க்கின்றன தீய நட்புகள் கிருபையை மெதுவாக அழிக்கின்றன. எனவே குழந்தையின் நண்பர்கள் வட்டத்தைப் பற்றிய பெற்றோரின் கவனமும் வழிநடத்தலும் ஒரு ஆன்மீகக் காவலாகவும், கிறிஸ்தவ நெறிப்படுத்தலாகவும், பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் ஒரு தெய்வீக உதவியாகவும் காணப்பட வேண்டும்.

**7. இளையோர்களின் ஆன்மிகப் பாதுகாப்பில் பெற்றோரின் பங்கு**


இளையோர்களின் மனமும் வாழ்க்கையும் திசைமாறாமல் நிலைத்திருக்க, பெற்றோர், ஆசிரியர்கள், திருஅவைப் பணியாளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. குடும்பம், பங்கு, பாடசாலை இவை மூன்றும் சேர்ந்து ஒரு ஆன்மீகப் பாதுகாப்புக் கோட்டையை உருவாக்குகின்றன. இன்றைய உலகின் சவால்கள்: வேகமாக மாறும் தொழில் நுட்ப உலகம், தவறான சமூகப் பாதிப்புகள், மதிப்பில்லா கலாசார நுழைவுகள், போதைப் பொருள், வன்முறை, இனவாதம் போன்ற காட்சிகளின் ஆதிக்கம், இவை எல்லாம் இளையோர்களின் உள்ளத்தையும், எதிர்காலத்தையும் பலவீனப்படுத்தக்கூடியவை. அதனால் இளையோர்களை விசுவாசத்தின் ஒளிக்குள் வளர்ப்பது பெற்றோரின், ஆசிரியர்களின் மற்றும் திருஅவைப் பணியாளர்களின் புனிதப் பொறுப்பு ஆகும். ஒரு இளைஞன் தன் வாழ்க்கையில் ஒரு வலிமையான திசையை, படிநிலையைத் தேடுகிறான் அது திருஅவை மொழியில் "ஆன்மீக வழிகாட்டுதல்" எனப்படுகிறது. இந்த வழிகாட்டுதலே அவரைக் குழப்பங்களிலிருந்தும் சோதனைகளிலிருந்-தும் காப்பாற்றும். குடும்பத்திலும், பாடசாலைகளிலும், பங்குத் திருஅவைகளிலும் நாம் செய்ய வேண்டியது: இளையோர்களுடன் நேர்மையான உரையாடல், விசுவாசக் கல்வி, நற்பண்பு வளர்ப்பு, திருப்பலி மற்றும் அருட்சாதனங்களில் பங்கேற்பு, பங்கு இளையோர் குழுக்களுடன் இணைப்பு, திருவிவிலியமும் திருத்தந்தையின் போதனைகளும் அவர்களுக்கு போதித்தல் கிருபை நிறைந்த ஊக்கமும் ஆதரவும் வழங்குதல். இளையோர்கள் தனிமையில் தள்ளப்பட்டால், உலகின் குரல்கள் அவர்களை எளிதில் பலவீனப்படுத்தும். ஆனால் அவர்கள் அன்பின் வட்டத்திலும், விசுவாசத்தின் சூழலிலும் வளர்ந்தால், (தொடர்ச்சி 10ம் பக்)

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

# இலங்கை மண்ணில் புதிய வருகை தரும் கலக்கம்

## கிறிஸ்து பிறப்போடு கலந்த ஒரு திறனாய்வு

**கிறிஸ்து பிறப்பு என்றாலே நாம் எண்ணுவதும் எண்ணாததும் நிகழ்ந்தேறும் காலமிது. அமைதியின் அரசர் பிறப்பு பேரானந்தத்தை அள்ளித் தருகிறது. ஆனால் இலங்கையில்இன்று பலருக்கு இது கலக்கத்தைத் தருகிறது என்கின்றனர் திறனாய்வாளர்கள்.**



ம.பிரான்சிஸ்
தொடர்பாடல் ஆசிரியர்

இங்கு நாம முதலல எடுககும "கலககம" இயேசு பிறந்தபோது ஞானிகள் "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம். அவரைவணங்க வந்திருக்கிறோம்." என ஏரோதிடம் கேட்டதும் ஏரோது கலங்கியது. (மத்தேயு 2:2-3) இந்த ஏரோது பலசூட்சிகளை, ஊழல் மோசடிகளைச் செய்து பலரைக் கொன்று அரச பதவியைக் கைப் பற்றியவன். இதனால் இயேசு பிறக்கும் போது சிந்திக்கும் திறன் பாதிக்கப்பட்டு விபரீதத் தீர்மானங்களை நிறைவேற்றியவன். ஆகவே வேறு ஓர் அரசன் வருகை தந்துள்ளார் எனக் கேள்வியுற்றதும் தற்காப்பின்மையை உணர்ந்து கலங்கினான்.

இங்கு நாம் எடுக்கும் இரண்டாவது "கலக் கம்" ஏரோதின் அரண்மனைக்கு ஞானிகளின் வருகை ஏற்படுத்தியதுபோல, தற்போது, இலங்கையில், இன்னுமொரு நபர் அமைதியாக அரண்மனைக்கு வந்ததும் நிகழ்ந்திருப்பது: அவர்தான் அரச தலைவர் மாண்புமிகு சனாதிபதி அநுர குமார திசாநாயக்க. அவர் அதிகாரமேற்றதும் அரசாங்கத்தின் பலதலை-வர்கள் கலக்கமடைந்தனர். இந்தக் கலக்கம் மறை சூழ்ச்சிகள், உட்சிக்கல்களை உட்-குடைந்து ஆராயப்போகிறது என்ற பேரச்சமாக ஊழல்வாதிகள் மத்தியில் மாறிவருகின்றது. புதிய சனாதிபதி, கவர்ந்திழுக்கும் சாமர்த்திய-முடைவர். அவர் முழுஉலகமும் முழுக்கவனத் தையும் கொண்டுள்ள சிம்மாசனத்தில் தனது பார்வையை அமைக்கிறார். அது ஆண்டவர்க் கத்தினருக்கு அதிர்ச்சியை அனுப்பியது. அவர்கள் தாங்கள் அமைத்துள்ள ஒழுங்கு மரபுகளுக்கு ஓர் அச்சுறுத்தலாகக் கண்டு கலங்கு கின்றனர்.

அரசியலில் சனாதிபதியவர்களின் விண் மீன் உயர்ந்து கண்சிமிட்டத் தொடங்க எமது ஏரோதுகளின் பிடியிலிருந்த எமது நாடு தளரத் தொடங்கிவிட்டது. இங்கு "உள் ஒன்று வைத்து புறமொன்று பேசி, புன்முறுவலோடு சூட்சிசெய்-தால் அவர்களும் ஏரோதுகள் தான்". எண் ணம்போல் சொல், இவைகள் இரண்டும்போல் செயல். இதுதான் ஒருவனைத் தனக்குள் ஒருமிக்கும்."தனக்கு எதிராகத் தானே பிளவு-படும் எந்த அரசும் பாழாய்ப் போகும்." (மத்தேயு:12:25).

ஏரோது பாதுகாப்பின்மையைக் கையாள எடுத்துக்கொண்ட ஆயுதம் அரச பயங்கரவாதக் கொலைகள். அதிகாரத்தைச் சுவைத்த ஏரோது அதைச்சூழ்ச்சிகள், ஊழல்கள் கொடுங்கோண் மையால் தம்வசப்படுத்தி விரிவுபடுத்தினான். அந்த ஓர் இரவில் ஏரோதின் அரண்மனை மீது நிலா திகிலான ஒளியை வீசியது. ஞானிகளின் சிங்காரத் தோற்றத்துடனான வருகை ஏரோதிற்கு கடும் கலக்கத்தை ஏற்படுத்தியது. ஏரோதின் உலகத்தைத் தலைகீழாக மாற்றியது. ஞா-னிகளின் கண்கள் அவனது பலத்தினைத் துளையிடுவதுபோல் அவனுக்குத் தோன்றியது என்கின்றனர் ஆய்வாளர்கள். அது அமைதி யற்ற நிலையுடன் அவனது ஆன்மாவின் ஆழத்தைத் துளைத்தது. ஏரோதின் ஆட்சியினை, மாற்றியமைக்கும் நகர்வைக் குறித்து ஞானிகள் அமைதியான தொனியில் பேசினார்கள். அது ஏரோதின் நிச்சயமற்ற தன்மையைத் தூண்டியது. குடிமக்களின் அமைதியின்மையையும் அதிருப்தியையும் ஏற்டுத்தியது.

பொய்யார்வத்துடன்,குழந்தையின் இருப் பிடத்தை அறிந்ததும் தனக்குத் தெரிவிக்குமாறு ஏரோது ஞானிகளிடம் கோரினான். ஆயினும் ஞானிகள் ஏரோதிடம் திரும்பாததால் அங்கு இரண்டு வயதுக்குட்பட்ட அனைத்து ஆண் குழந்தைகளையும் குரூரமாகக் கொன்றான். ஏரோதின் ஆளுகைப்பாணி சர்வாதிகாரத்தின் கலவைகளாலானது. சீர்திருத்தங்கள் சிதறடிக் கப்பட்டன. சுதந்திரமான பேச்சு, மக்களின் சிவில் உரிமைகளில்கடும் தடையைக் காட்டி யது. அவனது தலைமை, அரசியல் சுத்திகரிப்பு, கருத்து வேறுபாட்டிற்கான கடுமையான அணுகுமுறை, அவநம்பிக்கையால் குறிப்பிடப் பட்டது. எந்த வகையான எதிர்ப்பையும் கடுமையான விளைவுகளை சந்திக்கும் ஒரு நிலையாக மாற்றினான். ஏரோது, யூதகுடிமக்கள் மத்தியில் செல்வாக்கற்றவனாகின்றான். ஞானிகளின் தீர்க்க தரிசனங்கள் ஏரோதைக் கனமாக அழுத்தியது, அவனது அசைக்க முடியாத நம்பிக்கையின்மீது சந்தேகம் எட்டிப்பார்த்தது. அவனது ஆட்சியை இயக்கிய பயம் இப்போது உள்நோக்கித் திரும்பியது. இதனால் ஏரோது நாளடைவில் தனது கீரிடத்தை விட்டு இறங்க நேர்ந்தது.

புதிய சனாதிபதி ஆட்சிக்கு வந்ததும், மக்கள் முன்னரான ஆட்சியில் இருந்த இருண்ட பக்கங் களை உணர்ந்தனர்: விமர்சகர்கள் மௌனமாக் கப்பட்டவிதம், அரசியல் மாற்றுக் கருத்துடை யோர் மர்மமான முறையில் மறைக்கப்பட்ட விதம், ஊடகங்கள் கடுமையான கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டவிதம். அரச ஆதரவு வன்முறைக் குற்றச்சாட்டுகள் விதிக்கப்பட்ட விதம், வெகு ஜன நியாயப் போராட்டங்களுக்கு அழிக்கப் பட்ட விதமும், சுயநலத்திற்காக, பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியவிதம்,அதிகாரத் துஷ்பிரயோகங்கள் அரங்கேற்றிய விதம் என எல்லாமே வெளிச்சத்திற்கு வரத்தொடங் கின. இது, இதனுடன் தொடர்புடைய நீலம், வெள்ளை, பச்சை, சிவப்பு என அரசியல் சார்புடைய கட்சியாளர்களிடையே கலக்கத் தையும் மக்களிடையே ஆர்ப்பரிப்பையும் ஏற்படுத்தியது.

ஏரோதுபோல், நாம் மேலேகூறிய அரசியல் சார்புடைய நிறங்கள், அதிகாரத்தை உறுதிப் படுத்த விஜேயின் வேட்டைக்காரன் படத்தில் ஒரு வேடத்தில் வேதநாயகம் பயத்தைக் கையி லெடுத்ததைப்போல் பயத்தை ஆயுதமாக்கினர். நாளடைவில் ஏரோதைப்போல், இந்த நிறங்களும் தமது சிம்மாசனத்தை இழக்கநேரிடும் என்ற பயத்தால் மறை-அட்டூழியங்களை ஆரங்கேற்றிப் பலரை கதியற்ரோராக்கின. இந்த நிறங்கள் குடிமக் களின் நல்வாழ்வைவிட தாங்கள் மட்டும் செல்வங்களை சேர்த்து, மக்கள் சத்திரங்களிலும் சாவடிகளிலும் நாள்களை கழிக்கவித்திட்டனர். கம்பனிகளிலும் காப்பற் றோட்டுக்களிலும் களிப்புலா சென்றனர். மக்கள் வீதியோரம் விழுந்த விதைகளாக மிதிபட்டனர். ஏரோது கட்டவிழ்த்துவிட்ட பயம், அப்பாவிகளின் படுகொலை, அவனது கொடுங்கோண்மை யூதேயாவில் ஒருநிலையான வடுவை ஏற்படுத்தியது.

அதேபோன்று, இந்த நிறங்களின் ஆட்சியின் கீழ், இலங்கை ஓர் உடைந்த சமூகத்தை எதிர்கொண்ட துடன் சர்வதேச நம்பகத் தன்மையையும் இழந்து அழியாத வடுவை ஏற்படுத்தியது.துடிப்பான கலாசாரம் கொண்ட எமது இலங்கையில், பொரு ளாதார அமைதியின்மை, அரசியல் நிச்சயமற்ற தன்மை, பயத்தால் துவண்டுபோன மக்கள், எதிர்காலம் என்னவாகுமோ என்று தெரியாமல் ஒரு புதிய ஆட்சியாளரை எதிர்பார்த்தனர்.

நீண்டகால அரசியல் உயர் அடுக்கின் மேல் பொதுமக்களின் ஏமாற்றத்தைச் சரியாக விளங்கி, தங்களை வழிநடத்த ஒரு தலைவரை மக்கள் எதிர்பார்ப்பதை அறிந்து அதைச்சாதுரிய-மாகப் புதிய சனாதிபதி வடிவமைத்தார். அவரது பிரசாரம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல், மற்றும் மேலே நாம் குறிப்பிடும் நிறங்க-ளின் செயற்பாடுகளுக்கு விடையளித்தது. எனவே மக்கள் ஆணை வழங்கினர். அநுர அரச தலை-வரானார்.

ஒரு மாற்றத்தை உணர்ந்தமக்கள், புதிதாகப் பதவிக்கு வந்தவர் பின்னால் அணிதிரளத் தொடங்கினர். புதிய சனாதிபதியின் கல்வி மான்கள் அரண்மனைக்கு அழகு சேர்த்த-னர். இதனால் உலகத்திற்கு ஒரு வலிமைமிக்க ஆட்சியாளர் எனத் தன்னைத் திடப்படுத்தி னார். அவர் தனது தோழர்களுடன் ஊழல் எதிர்ப் புப் புயலுக்குப் புதிய சகாப்தத்தை அறிமுகப் படுத்தினார். சனரஞ்சகச் சொல்லாட்சி, நம்பிக்கைக் குரிய சீர்திருத்தங்கள், துணிச்சலான முன்முயற்சி கள், வெகுசனங்களின் மனங்களைக் கைப்பற் றும் பார்வைநோக்குகள், மக்களின் மனங்களில் நம்பிக்கையை உணர்த்துகின்றன. "ஊழலுக்கு ஒரு தொடர் விசாரணைகள்" தொடங்கப்பட்டன. இந்த விசாரணைகள் நாம் மேலேகுறிப்பிட்ட நிறங்களின் ஆட்சிகளின் ஊழல், உட்பட சகல சட்டவிரோத நடவடிக்கைகளையும் அம்பலப் படுத்தி நீதியைக் கொண்டு வருவதை நோக்க மாக்குகின்றன.

புதிய சனாதிபதியின் வருகை எம்தேசத்தைக் குணப்படுத்த உழைக்கின்றது. ஏரோது கையாண்ட பயத்தந்திரங்கள், ஒடுக்குமுறைக்குப் பதிலாக அர்த்தமுள்ள உரையாடலில் குடி மக்களை ஈடுபடுத்தும் அரசியல் அமைப்பினை அவசியமாக்குகின்றார். அவர் நீதிக்கான வேட் கையை, பழிவாங்கும் அரசியலுக்குள் கொண்டு செல்லாமல் பணிபுரிகின்றார். அனைத்துக் குடிமக்களின் குரல்களையும் மதிக்கும் ஓர் அரசியலை-அரசாங்கத்தை உருவாக்கின்றார்.

இலங்கையர் ஆழமாக விரும்பும் சனநாயகம், சகோதரத்துவம், சமாதானம், நல்லிணக்கத்திற்கு தன்னை அர்ப்பணக்கின்றார்.

*(தொடர்ச்சி 13ம் பக்)*

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## மண்ணுலகில் அமைதி

உன்னத தேவன் பூவில்
ஒளிதரும் வல்ல நேரம்
மன்னவன் வதனம் காண
மகிழ்வுடன் நீயும் வாராய்
இன்னலை நீக்கும் பாலன்
ஈடிலா ஏற்றம் தந்தே
தன்னலம் இல்லா வாழ்வு
தரணியில் மலரச் செய்வான்

பட்டமும் தேவை யில்லை
பரமனின் பிள்ளை நீரே
சட்டமே சொல்லும் நீதி
சரித்திரம் ஆன தேவா
தட்டிடும் மாந்தர் வாழ
தயவுடன் நோக்கும் நாதா
சட்டென வருவீர் இன்றே
தந்திடும் உந்தன் ஆசி

மண்ணிலே வந்து நீரும்
மக்களை மீட்டு நின்றீர்
கண்ணிலே கண்ட உம்மை
கருத்துடன் காணா நெஞ்சர்
விண்ணினை நோக்கும் மாயம்
விமலனே அறிவீர் நாளும்
பண்ணிலே பாடி நானும்
பாங்குடன் அமைதி கேட்பேன்

மூவொரு தேவன் நீரே
முழுமதி எனவே வந்தீர்
நாவினால் பாடிப் போற்ற
ஞானியாய் வந்த வார்த்தை
ஆவினம் சூழ்ந்து உம்மை
அன்புடன் நோக்கச் செய்தீர்
தாவிடும் மனத்தை ஆள
சடுதியில் வந்த பாலா

வானவர் வாழ்த்துப் பாடி
வணங்கியே நின்ற நாளில்
கானமே கேட்டு வந்தார்
கனிவுடன் மந்தை மேய்ப்போர்
தானமாய்ப் பெற்றார் உந்தன்
தயைநிறை பார்வை ஒன்று
ஈனராய் நின்ற மாந்தர்
ஈடிலா அருளைக் கண்டார்


நின்னரும் செயலை வேண்டி
நிமலனே பணிந்து வந்தேன்
உன்னருள் தாரும் என்றே
உவப்புடன் தினமும் கேட்பேன்
அன்பனே எம்மை ஆளும்
அகத்திலே அமைதி தாரும்
என்நிலை வந்த போதும்
யாவரும் உம்மில் வாழ்வோம்

அமைதியைத் தேடும் உள்ளம்
அவனியில் உம்மைக் காண
சுமைதனை நீக்கி என்றும்
துணிவினை மனத்தில் ஏற்றும்
உமைத்தினம் தேடும் மக்கள்
ஒளியெனத் துலங்கச் செய்யும்
எமைத்தினம் காக்கும் உம்மை
ஏற்றிட அருளைத் தாரும்

பஞ்சமும் பிணியும் வாட்ட
பாதகச் செயலும் கூட
தஞ்சமே அடையும் மாந்தர்
தவிப்பினை நீக்க வாராய்
அஞ்சிடும் அகத்தில் என்றும்
அன்பனே தங்க வாராய்
விஞ்சிடும் உலகின் தீமை
விலகிடச் செய்ய வாராய்!!



குளோரியா ரூபா அன்ரனி



அருட்சகோதரன் வி.வினோதன்

## மனுவுரு எடுத்த மன்னவன்

மண்ணவரின் பாவம் போக்க
மனுவுரு நீ எடுத்தாயோ நாதா
மன்னவர் தம் துன்பம் நீக்க
மன்னவர் தகுதி களைந்து

மாபாவிகள் நாமெனத் தெரிந்தும்
மாபரன் நீர் எமக்காய் உதித்தாயே
மாதவத்தாள் மாமரியிடம்
மாந்தர் வடிவில்

அருட்சகோதரன்
ஏ.பிரவீன்ராஜ்

## விடியல் மலர்ந்தது

விடியல் மலர்ந்தது
விண்ணகம் மகிழ்ந்தது
மண்ணகம் வருகையில்
என்னகம் குளிர்ந்தது

தாலாட்டும் தாயின் அரவணைப்பில்
தவழ்ந்தது தெய்வக் குழந்தை
எம்மவர் மனக்குறை நீக்கிட
எம்மில் ஒன்றானதே

மேகங்கள் முழங்கிட
மேன்மையில் வேந்தர்கள்
அன்பைப் பரிசாய் அளித்திட
அன்பர் நீரும் மகிழ்ந்தீரே

உண்மையின் நாதனே
உலகாளும் வேந்தனே
மண்ணக மாந்தரின்
மனக்குறை நீக்குமே

மாண்பினை இழந்திட்ட
மானிடர் மனங்களில்
வார்த்தை மனுவாகி
வாழ்வை ஈன்றதே

பாவத்தை நீக்கத்தானோ
பாலனாய் பிறந்தாய்
பாவத்தில் மாண்ட எம்மை
பாசம் வைத்து மீட்டருளும்





## ஏங்கு நீ பிறப்பாயோ பாலா

எங்கு நீ பிறப்பாயோ பாலா எம் நாட்டிலே
கூறுகிறேன் எம் நிலை கொஞ்சம் கேள்
மாற்றம் ஒன்று நிகழ்ந்தது வானிலையில்
மாறிப் போனது நம் வரைபடம்

தென் நாட்டில் நீ பிறக்க வாராயோ!
தென்படும் இடம் தெரிவதெல்லாம் வெள்ளக்காடு
தேவமகன் நீ பிறக்க
தென் நாடோ இங்கில்லை

மலையகத்தில் நீ பிறக்க வாராயோ!
மண் மட்டுமே எஞ்சியது
மன்னவன் நீ பிறக்க
மாடடைக்குடில் கூட மிஞ்சலையே

ஈழத்தில் நீ பிறக்க வாராயோ!
இயற்கையின் சீற்றத்தால்
இடர்படும் இடங்களே எஞ்சியது
இறைவா நீ பிறக்க இங்கும் இடமில்லையே

இலங்கை மாந்தர் நாம்
எவ்வழி செல்வோமோ - இறைவா
இருள் போக்கிடும் உன் ஒளி அடைய
பலநேரம் சிந்தித்தபின்
பதில் ஒன்று கிடைத்தது
பாவி என் நெஞ்சில்
ஓர் இடமுண்டெல்லோ
பாலா என் மனதில் நீ பிறக்க வாராயோ

அருட்சகோதரன் அ.ஆகாஷ்



## எதிர்பார்ப்பின் விடியல்

காலங்களும் யுகங்களும் கடவுளுடையவை
கடல்களும் கோள்களும் மடல்களும் தடைகளும்
கருத்துடன் வழிநடத்தும் கடவுளுடையவை
காத்திருக்கும் மனித வாழ்வும் கடவுளுடையவை

வங்கக் கடலின் உயர் முத்தான இலங்காத்தீவு
பொங்கியெழுந்த பெரும் புயலால்
எங்கும் பெரு வெள்ளமாய் மூழ்கியதே எம் தேசம்
தங்கிய இல்லிடங்கள் மலைச் சரிவில் மண்ணாகியதே

முத்தினங்கள் மூர்க்கம் கொண்ட இயற்கைச் சீற்றம்
நித்திரையில் அமைதியானோரை நித்தியமும் அமைதியாக்கியதே
விழை நிலங்கள், சொத்து செல்வங்கள் மனித உயிர்கள் என
மொத்தமாய் வாரிச் சென்றதே அரக்கப் புயல் டிட்வா

வானுயர்ந்த மடலகளும் கதன் பசாரியும பூங்காக்களும்
வான்பாயும் நீரின் புரட்சியால் நிர்மூலமாகியதே
காணும் இடமெல்லாம் மாண்புமிகு மனித உடலங்கள்
காண முடியாது கதறும் உறவுகளின் அவலங்கள்
விழிப்பாய் இருங்கள் ஆயத்தமாயிருங்கள் என்றீர்
விளிம்பு மீறிப் பீறிட்ட நீர்த்திரளால் நாம்
அழிவின் அகோரத்திற்கே சென்று விட்டோம்- எதிலும்
விழிப்பாய் இருப்பதன் அர்த்தம்தான் இதுவோ

இயற்கை இறைவனின் கொடை என்றறிந்தும்
செயற்கையான மனித செயற்பாடுகள் எம் இனத்தின்
முயற்சிகள் முழுவதையும் நொடிப் பொழுதில் புதைத்ததுவே
பயத்தில் மூழ்கிய எம்மவர்க்கு வியத்தகு ஆலோசகராவீரோ

காரிருளில் நடந்தோரும் சாவின் நிழல் சூழ்ந்தோரும்
பேரிடரினால் வாடிய மக்களும் மீண்டெழுந்திட
பாரினில் வாழும் பாதகர் பாவங்கள் ஒழிந்திட
பேரொளியாய் மீண்டும் எம்மிடையே தோன்றாயோ

நாங்கள் இழந்தவற்றைக் கூற அகரவரிகளில் இடமில்லை
எங்கள் மனத்துயரம் ஆற்றிட அகங்களில் ஆருமில்லை
மீட்க இயலாதவாறு உம் கை குறுக்கிடவில்லை
கேட்க முடியாதவாறு உம் காதும் மந்தமாகிடவில்லை

வலிமைமிகு இறைவனாய் அமைதியின் அரசராய்
எளிமையாய் மாடடையில் மலர்ந்த இறைமகனே
ஏந்தி நிற்கின்றோம் நம்பிக்கைமிகு கரங்களை
எதிர்பார்ப்பின் விடியலாய் விரைந்தே வாராயோ

S.M.வுளோறன்ஸ் , இளவாலை

## விடியலின் பயணம்

விடிவெள்ளி ஒன்று உதித்தது
புதியதொரு வழியாய்
மன்னவர் மனதில்
நாயகன் மலர்ந்தான்
புவியின் ஆதவனாய்

பெத்தலேகம் அகமகிழ
யூதர் அக்களிக்க வானவர் கீதம் பாட
மாந்தர் மனங்கள் மகிழ
மாடடை குடிலில்
மன்னவன் மலர்ந்தான்


தாயகம் நோக்கிய
தாயவளின் பயணம்
தாய்த் திருஅவையின்
நம்பிக்கைப் பயணம்
கடவுளின் தரிசனப் பயணம் - அது ஒரு
அன்பின் அகராதியின் அகிலத்தின் பயணம்

நசரேத்து நாயகியின் பெத்தலேகம் பயணம்
விண்ணக ஜெருசலேம் நோக்கிய பயணம்
வேள்வியின் தியாகப் பயணம்
வரலாற்று விடிவெள்ளியின் பயணம்

மனங்கள் திறக்கட்டும்
ஆதவன் வரவிற்காய்
மனிதம் மண்ணில் மலரட்டும்
பிளவுகள் உடையட்டும்
அன்பின் பயணம் வாழட்டும்



அருட்சகோதரன்
அருள்சீலன் அபின்றோ



## மார்கழியே! உன்னை மறக்கமுடியுமா?



கார்த்திகையில் கரிகாலன் படைக்காய்
கனிந்த எம் நெஞ்சங்கள்
கதறி அழுது கண்ணீர் வடித்து
கடந்திட பிறந்ததுதான்
கடைசி மாதம் மார்கழி

மார்கழியே உன்னை இலங்கையர்கள்
நாங்கள் எப்படி மறப்போம்!
மறக்க முடியாத வடுக்களை
பதித்ததும் நீதான்
மானிடர்கள் நாங்கள் என்ன செய்ய
தையில் தடம் பதிக்க
மார்கழி கடக்க வேண்டுமே

அமைதி அளிக்க வந்த மானிடமகன்
அவனியில் மனுவுரு எடுக்க
நேர்ந்ததும் உன்னையே
அகிலம் அழிக்க வந்த ஆழிப்பேரலை
ஆக்கிரோஷம் கொள்ள தெரிந்ததும் உன்னையே

புதுவருடத்துக்காய் புதுப்புது மாற்றங்கள்
புலர்வதும் உன் ஆயுள் கடைசி நாட்களிலே
புயலால் புதைந்த அப்பாவி உயிர்கள்
புதுவாழ்வு பூக்காதா எனப்
புலம்புவதும் உன் நாட்களிலே

கொட்டும் மழையால் குதூகலிக்கும் அளவிற்கு
கொஞ்சமும் வாட்டமில்லா இயற்கை
வாசம் வீசுவதும் உன் இருப்பிலேயே
கொட்டித் தீர்த்த மழைவெள்ளத்தில்
கொத்துக்கொத்தாய் மூழ்கிய
உயிர்களின் உடல்கள்
கொஞ்சம் கொஞ்சமாய் மீட்புக்குழுவால்
மீட்கப்பட்டதும் உன் வருகையிலேயே

பன்னிரு மாதத்தில் கடைசியாயும்
கிறிஸ்தவத்தின் தொடக்கமாயும்
பதைபதைக்கும் மனதில் என்றும் ஓர்
பயங்கரத் தீயாய் பற்றியெரியும் மார்கழியே!
பலயுகம் கடந்தாலும் மானிடர்கள் நாங்கள்
மறக்க முடியுமா உன்னை?

அருட்சகோதரன்
யேசுதாசன் கஸ்ரோன்

## கரம் கொண்டு துடைத்திடுவோம்



கரை புரண்டு ஓடுகின்ற
காட்டாற்று வெள்ளம் போல்
விழி நீர் சொரிந்து அழுகின்ற
மக்களை நீ பாராயோ

இயற்கையின் சீற்றத்தால்
நாடெல்லாம் வெள்ளமாகி
வீடிழந்து சொத்திழந்து
ஏதிலியாய் ஆகிவிட்டார்

வெள்ளத்தில் மூழ்கிப் பலர்
உயிரிழந்து போய்விட்டார்
நீரிலே மூழ்கிப் பலர்
காணாமல் போய் விட்டார்.
மண்மேடு சரிந்ததனால்
வீடெல்லாம் மேடாகி
அதற்குள்ளும் பலபேர்
புதையுண்டு போயுள்ளார்.

கூட்டொருங்கியக்கமாக
நாமெல்லாம் பயணிப்போம்
யூபிலி மகிழ்வுதனை
அழுவோர்க்குக் கொடுத்திடுவோ

கிறிஸ்து பிறப்பு விழா
பகிர்வின் விழாவாகும்
எளிமையாய்க் கொண்டாடி
பகிர்ந்து மகிழ்ந்திடுவோம்.
துன்புறும் உறவுகளின்
துயர்தனைக் களைந்திடுவோம்
அவர் வடிக்கின்ற கண்ணீரைக்
கரம் கொண்டு துடைத்திடுவோம்

பாலகன் பிறப்பிற்கு
அர்த்தம் கொடுத்திடுவோம்
உள்ளத்தில் குடில் அமைத்து
பாலகனைத் தாங்கிடுவோம்.

இ.அ.அமலரட்ணம்.

## ஆசியருளும் பாலகனே

தரணியை மீட்பதற்காய்
தாழ்மையின் உறைவிடமாய்
மார்கழிக் கடம் களிரில்
மாடடைக் குடிலினில்
மரியன்னை மடியில்
அமைதியின் அரசராய்
அகிலத்தில் பிறந்தவரே

பூவுலகின் வாழ்வியலால்
அவலங்களில் அல்லலுறுவோரை
உம் ஒளிவழிப்பார்வியினால்
அன்புடன் உற்றுநோக்கி
ஆதரித்து அனைவருக்கும்
நிறையாசீர் வழங்கிடுவீர்
எம் மீட்பின் பாலகனே

சேரூபன் ஷெர்வின்

நன்னெறியில் மாந்தரை மீட்டிட
தன்பங்களைக் களைந்திட
துயரங்களைத் தகர்த்திட
வழிகாட்டும் தூய ஒளியாக
அமைதியின் விடியலென
அனைவரையும் மீட்டெடுக்க
அவனியில் அவதரித்தவரே



## வாரீர் ஆராதிப்போம்

மார்கழியின் மாகுளிரில்
மாடடையம் புன்குடிலில்
மாசகலாப் பாலகனாய் வந்துதித்தீர்
வாரீர் ஆராதிப்போம்

விண்மீனைக் கண்டு - அன்று
விரைந்து சென்ற ஞானிகள் போல் - இன்று
மாடடைகுடிலில்
மன்மதன் யேசுவைக் காணவாரீர்
உலகிற்கெல்லாம் உப்பாக ஒளியாக
உத்தமனாய் வந்துதித்த - எம்
உலக இரட்சகரை
வாரீர் ஆராதிப்போம்

தூய ஆவியால் உந'மபைப்':
மரியாளின் வயிற்றில் உருவாகி
துன்பங்களைப் போக்க வந்த விடியலை
துடிப்புடனே சென்று ஆராதிப்போம்

இடையர்கள் பாடிட
ஞானிகள் தேடிட
மாந்தர்கள் ஆடிட
மன்னவனாம் யேசு பாலனை
ஆராதிப்போம்
நாம் ஆராதிப்போம்

திருமதி ம.பிலசிடா

# இலங்கையின் இருளில் ஒளிரும் பெத்லகேமின் ஒளி

, ன்று இலங்கையில் நாம் காணும், கேட்கும், அனுபவிக்கும் அன்றாட நிகழ்வுகள் மற்றும் செய்திகள் உண்மையில் எம்மை வியக்க வைப்ப தோடு ஒருவிதமான அச்ச உணர்வை யும், நம்பிக்கையில்லாத் தன்மைகளையும் ஏற்படுத்துகின்றன. அநீதிச் செயல்கள், அதீத போதைப் பாவனைகள், விபத்துக்கள், தற்கொலைகள், குடும்ப வன்முறைகள், உயிர்கொல்லி நோய்கள், மாறுபட்ட வாழ்வி யல் சூழமைவுகள் போன்ற துயரங்களின் மத்தியில், இவ்வருடம் இயேசு பாலகனின் பிறப்பின் செய்தி நமக்கு ஒரு புதிய நம்பிக் கையின் ஒளியாக விளங்குகிறது. மனிதன் மனதில் நம்பிக்கை மங்கியிருக்கும் இக் காலத்தில், பெத்லகேமில் பிறந்த அந்தச் சிறு குழந்தை "சமாதானத்தின் அரசன்" (எசாயா 9:6) மனித குலத்திற்காகப் புதிய வாழ்வை அறிவிக்கிறார்.

**1. இன்றைய இலங்கையின் துயரமான நிதர்சனம்**

இன்றைய இலங்கையின் சமூக நிலையைப் பார்க்கும் போது, வறுமை, வேலை இழப்பு, விலையேற்றம், அரசியல் குழப்பம், மதவெறி, ஊழல் போன்றவை பலரின் வாழ்வில் துன்பத்தையும் பயத்தை யும் ஏற்படுத்தியுள்ளன. பலர் மனவழுத் தத்தால் தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். போக்குவரத்து விபத் துக்கள் தினமும் உயிர்களைப் பலியாக்கு கின்றன. உயிர்க்கொல்லி நோய்கள் மனித வாழ்வை அச்சுறுத்துகின்றன. குடும்ப வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அதற்கு போதைப் பாவனையும், மாறுபட்ட வாழ்வியல் சூழமைவுகளும் காரணமாகின்றன.

ஆனால் இந்த இருளின் மத்தியில், "இருளில் நடக்கும் மக்கள் பேரொளியைக் கண்டார்கள்" (எசாயா 9:2) என்ற இறைவார்த்தை நமக்கு ஏற்றாற் போல் உள்ளது. அந்த ஒளி தான் இயேசுக்கிறிஸ்து.

**2. பெத்லகேமின் நம்பிக்கைச் செய்தி**

பெத்லகேமின் இரவின் அமைதியில், ஏழ்மையிலும் துன்பத்திலும் பிறந்த இயேசு, அதிகாரமும் ஆடம்பரமும் நிறைந்த உலகத்திற்கு மாறுபட்ட ஒரு செய்தியை வழங்கினார். அதாவது



அன்பும் தியாகமும்தான் உண்மையான அதிகாரம். "ஏனெனில் மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரியவும் பலருடைய மீட்புக்கு விலை யாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்" (மாற்கு 10:45) என்ற இறைவார்த்தை அவருடைய வாழ்க் கையின் மையமாக இருந்தது. இன்று இலங்கைய-ில் நிலவும் அநீதிகள், வறுமை, ஊழல், மதமோ-தல்கள் ஆகியவற்றை மாற்ற வேண்டுமெனில், நாமும் இயேசுவின் இந்த வழியைப் பின்பற்ற வேண்டும். உண்மையான கிறிஸ்மஸ் என்பது வெளிப்புற கொண்டாட்டம் அல்ல அது உள்ளத் தில் அன்பையும் சமாதானத்தையும் மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆன்மீகப் புதுப்பிப்பு ஆகும்.

**3. இயேசு துன்பத்திற்குள் பிறக்கிறார்**

இயேசு பாலகன் வறுமையின் மத்தியில் பிறந்தார். துன்பத்தையும் ஒதுக்கலை யும் அனுபவித்தார். எனவே இன்று துக்கத்திலும் நோயிலும் வாழும் மக்களின் இதயங்களில் தான் அவர் உண்மையில் பிறக்கிறார். "சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்று வேன்." (மத்தேயு 11:28) என எமது துன்பத்தில் பங்குகொள்ள எம் உள்ளங்களிலும் இல்லங் களிலும் பிறக்க விரும்புகிறார். இயேசுவின் பிறப்பும் அவரது வார்த்தைகளும் இன்று துயரத் தில் இருக்கும் ஒவ்வொரு இலங்கையருக்கும்

அருட்பணி யா. றமேஸ் அமதி

நம்பிக்கையின் அழைப்பு ஆகும்.

**4. செயலில் வெளிப்படும் கிறிஸ்து பிறப்பு**

இயேசுவின் பிறப்பு நமக்கு ஒரு அழைப்பாகும். அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கவும், அன்பை வெளிப்படுத்தவும், உயிரைக் காக்கவும் எம்மை அழைக்கிறது. "அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவ தில்லை. ஏனெனில் அன்பே கடவுள்" (1 யோவான் 4:8) என்று புனித யோவான் அழுத்தமாகக் கூறுகிறார். ஒருவரின் துயரத்தைப் பார்த்துப் புறக்கணிக்காமல், அவருடன் நடந்துசெல்லும் போது மட்டுமே இயேசு நமக்குள் பிறந்ததாக அர்த்தம் பெறுகிறது. "அவ்வொளி இருளில் ஒளிர்ந்தது. இருளோ அதை மேற்கொள்ளவில்லை" (யோவான் 1:5). இந்த வார்த்தைதான் கிறிஸ்து பிறப்பின் உண்மையான அர்த்தம். இருளின் ஆழம் எவ்வளவு இருந்தாலும், கிறிஸ்துவின் ஒளி அதை வெல்லும். இவ்வரு டம் கிறிஸ்மஸ் இதைத்தான் நமக்கு நினை வூட்டுகிறது. பெத்லகேமின் மந்தையிலிருந்த ஒளி இன்று இலங்கையிலும் பிரகாசிக்கட்டும். அன்பு சுயநலத்தை வெல்லட்டும், நீதி அநீதியை மாற்றட்டும், நம்பிக்கை நம்மை உயிர்ப்பிக்கட்டும். இயேசு பாலகனின் பிறப்பு நம் வாழ்வில் சமாதானத்தின், சகோதரத்துவத்தின், மற்றும் நம்பிக்கையின் புதிய விடியலாக மாறட்டும்.

## இலங்கை மண்ணில்....

( 7ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், ஏரோதின் கலக்கமும் இலங்கை யில் புதிய சனாதிபதியின் வருகையினால் வந்த கலக்கமும் காலத்தின் மூடுபனியில் மறைந்து விடாது, தைரியம், இலட்சியம், சவால்கள்,வாய்ப்புகள் நிறைந்த உலகில் அதி-காரம் மற்றும் பெருமைக்கான காலமாற்றப் போராட்டத்தைவிட்டுச்செல்லும். கட்டுப் படுத்தப்படாத அதிகாரத்தின் ஆபத்துகள் பற்றிய எச்சரிக்கை நீதிக்கான நீடித்த போராட்டத்தையும், சிறந்த எதிர்காலத்தை வடி-வமைப்பதில் நெறிமுறைத் தலைமையின் முக்கியத்துவத் தையும் நினைவூட்டும்.

அடக்குமுறையைக் கையாளும் நம் தலை-வர்களுக்குக் கலக்கத்தை ஏற்படுத்துகின்றார். "எனவே ஆனந்த மழையில் நம்நாடு மகிழ அநுர வருகின்றார்"என்று நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைய, ஊழல் குறும்பர்கள் கலக்கத்-தால் பேரச்சத்தினுள் செல்கிறார்கள். கணினித் தகவல்களைவிட களத்தகவல்களை எடுக்க ஒருவர் இருக்கின்றார். இயற்கைச் சீற்றங்கள் மத்தியில் எம் துன்பங்களில் துயர்துடைக்க நெருங்கி வருவார் என நம்பலாம். கல வரங்களையும், இனவாத வாளையும் பேரணி-களையும் தூண்டிவிட்டு குளிர்காய்ந்து கூட்டங்கள் கூடிச்சாதிக்கும் நுளம்பர்களிடையே



"பேதுருவிடம், உனது வாளை அதன் உறை யிலே திரும்பப்போடு. ஏனெனில் வாளை எடுப் போர் அனைவரும் வாளால் அழிந்து போவர்." (மத்தேயு26:52)என்று இயேசு எச்சரிக்கும் வார்த் தையைப் புரிந்து அவர் செயற்படுத்துவர்.

**"உண்மையை எடுத்துரைப்பதே என்பணி. இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்'.** (யோவான்18:37)

என்ற ,யேசுவின் அறைகூவலை சீர்தூக்கிப் பார்த்துச் செயற்படுவார் என்பது நிச்சயம். இயற்கைப் பேரிடர் மத்தியிலும் இயேசு பிறப்பை இந்த வருடம் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதுபோல, புதிய அரச தலைவரு டைய வருகை வந்திருக்கின்றது என எல்லாத் தமிழ் மக்களும் அவரை ஒரு சிங்களத் தலைவராகக் கொண்டாடுகிறார்கள். இது சரித் திரத்தில் நடைபெறாத ஒன்று. இயேசு பிறப்பு புதிய சிந்தனைகளைக் கொண்டுவரவதுபோல, புதிய அரச தலைவருடைய நீதிக்கான போராளித்துவ அனுபவம் தமிழ்மக்களின் போராளித்துவப்பின்னணியைப் புரிந்துகொண்ட மனப்பாங்குடன் எல்லாவற்றையும் கொண்டுவந்துள்ளன என்கின்றனர் திறனாய்வாளர்கள்.

மாமன்னன் நெப்போலியன் கூற்று: "நானும் அலெக்சாண்டரும் ஆயுத பலத்தால் அடக்கி ஆளமுயன்றோம். எங்கள் அரசு நிலைக்க வில்லை. ஆனால் இயேசு அன்பினால் ஆட்சிசெய்கின்றார். அவரது அரசு என்றும் நிலைத்திருக்கும்."ஓர் அரசனுக்கு வெற்றி தருவது ஆயுதபலமல்ல. நீதிநெறி தவறாத ஆட்சி முறையே. அதனால்தான் மன்னன் சாலமோனுக்காக பைபிளில் திருப்பாடல் ஆசிரியர் இப்படி மன்றாடு கிறார்: "கடவுளே, அரசருக்கு உமது நீதித்தீர்ப்பை வழங்கும் ஆற்றலை அளியும். அரச மைந்தரிடம் உமது நீதி விளங்கச் செய்யும்.அவர் உம் மக்களை நீதியோடு ஆள்வாராக. உம்முடையவரான எளியோர்க்கு நீதித்தீர்ப்பு வழங்குவாராக! மலைகள் மக்களுக்குச் சமாதானத்தைக் கொடுக்கட்டும்" (திருப்பாடல்.72:1-3). எனவே வருகை தந்திருக்கும் எமது புதிய சனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களுக்காக நாமும் கடவுளிடம் மன்றாடுவோம்.

# மாறியது உள்ளம் மாற்றியது யாரோ?



எம்.யோண் பற்றிக்

, ன்றைய காலகட்டத்தில் அதி நவீன தொழில் தொடர்பு சாதனங்கள் அதிகமாக இருந்தாலும் மனிதர்களுடைய வாழ்வு ஏதோவொரு வகையில், தொலைத் தொடர்பு சாதனங்களுக்குள்ளே அவர்களுடைய ஆன்மாவை நோகடிக்கின்ற துன்பப்படுத்துகின்ற வாழ்வுக்குள் சிக்குப்பட்டு, அவதிப்படுகின்ற நிலைகள் தான் அதிகமாக இருக்கின்றது. ஆனாலும் அவர்களுடைய வாழ்வு அழிந்து விடுவதற்கான ஒன்றல்ல என்பதை இறைவன் எமக்குத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றார். பாவிகளை மீட்கவே இறைமகன் இம் மண்ணில் மனுவுரு எடுத்தார் என்னும் செய்தி எமக்குத் தரப்படுகின்றது.

இன்று ஆலயங்கள் தோறும் மணி ஒலிகள் ஒலிக்கின்றது. அது ஆலயமணி ஓசையாகின்றது. நாம் இறைவனைத் தேடிச் செல்லும் ஓடைகளாக, எமது தேடல்களுக்கான இருப்பும் அடித்தளமுமாக இருக்கின்றது. “தன் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலையான வாழ்வைப் பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் இந்த உலகின் மீது அன்பு கூர்ந்தார்”(யோவான் 3:16) இவ்வுலகத்தின் இயங்கியல் நிலைகளே படைத்தவனின் கரங்களிலேதான் இருக்கின்றது. பிதாவும், சுதனும் இவ்வுலகத்தைத் தம் கரங்களிலே சுமந்து வைத்திருக்கின்றார்கள்.

இன்று நாம் காண்பவை என்ன? இவ்வுலகத்தை அழிக்கச் சாத்தான் பலவழிகளிலும் முயன்று வருகின்றான். பல சூழ்ச்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றான். உலகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஒரு கொடிய அரக்கன்தான் இந்தப் போதைவஸ்து. அவன் பலவிதமான உருவங்களிலே படையெடுத்து இந்த உலகத்தையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றான். யாதும் அறியாத அப்பாவிகளின் வாழ்க்கைக்குள் நுழைந்து அவர்களின் வாழ்க்கையை துன்பத்திற்குள்ளாக்கிக் கொண்டிருக்கின்றான். இன்று எம்முடைய தேசமும் விதிவிலக்கல்ல. நாடு முழுவதும் இந்தப் போதைவஸ்து என்னும் கொடியவன் பல கோடிக்கணக்கான பணத்தைச் சுருட்டி அப்பாவி மனிதர்களின் வாழ்க்கையை அழிவின் பாதைக்கு இட்டுச் செல்கின்றான்.

இன்று இயற்கை அனர்த்தங்களும் எம் வாழ்வை விட்டு வைப்பதாகத் தெரியவில்லை. எம்மை அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறது. பெரும் வெள்ளப் பெருக்குகள், அழிவுகள், இழப்புக்கள் என்று தொடர்ந்து கொண்டே செல்கின்றது. கடந்த பல வருடங்களுக்கு முன்பு சுனாமி என்னும் ஒரு பெரிய அலைப் பிரளயம் எம் தேசத்தையும் தாக்கியது. எம் தேசத்தில் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பாரிய அழிவுகளை யும், இழப்புக்களையும் சந்தித்த மக்களாக இருக்கின்றார்கள்.

இன்று அறியாமையின் இருளில் தங்கள் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். வெறுமனே சர்வதேசத்து ஆடம்பர மோகத்துக்குள் அவர்களின் கண்கள் மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எப்படியும் வாழலாம் என்ற இருளுக்குள் தங்கள் வாழ்வைத் துன்பத்திற்குள்ளாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இன்று அனர்த்த எச்சரிக்கைகள் கொடுப்பது போன்று அன்று கடவுளும் அந்த ஏதேன் தோட்டத்தில் நடுமரத்தின் கனியைப் புசிக்கக்கூடாதென்ற கட்டளையைச் சாத்தான் ஏமாற்றி ஊட்டியதுபோல இன்று போதைவஸ்துக்கள் ஊட்டிக்கொண்டிருக்கின்றன. மனிதத்தை அழித்துக் கொண்டிருக்கின்றது.

அன்றும் எம் தேசம் அழிக்கப்பட்டது. நாம் படைத்தவரிடம் முறையிட்டோம். அவர் எம்குரலைக் கேட்டார். அதுவும் மோசேயின் விடுதலைப் பயணம் போல எம் வாழ்வு மாற்றப்பட்டது. சொதோம், கொமறா என்னும் இரு பட்டணங்கள் அழிக்கப்பட்டன. கடவுள் லோத்தையும் அவர் உறவினர்களையும் ஓடும்படியாகக் கட்டளையிட்டார். அவர்கள் ஓடினார்கள். ஆனால் லோத்தின் மனைவி உப்புச் சிலையானாள். அவள் ஏன் உப்புச் சிலையானாள்? அவள் லோத்தின் மனைவி தானே அவளையும் கடவுள் காப்பாற்றி இருக்கலாமே என்று எண்ணத் தோன்றும். ஆனால் நடந்தது என்ன? அவளுடைய வாழ்வு கடவுளின் சினத்திற்கு உட்பட்டதாக இருந்தது.

அந்த அசிங்கமான பாலியல், விபச்சார வாழ்க்கைச் சிந்தனைகளுக்குள் போதைக்குள் அவளுடைய வாழ்வு அடிமைப்பட்டதாக இருந்தது. இன்றைய உலகில் நாங்கள் படிக்கும் இந்த ஊடகச் செய்திகளும் இதைத்தான் கூறி நிற்கின்றது. போதைவஸ்துகளும், விபச்சார பாலியல் ஊக்க மாத்திரைகளும், குடும்பப் பிறழ்வுகளும் இன்று மானிட வாழ்வை அழிவின் பாதைக்கு இட்டுச் செல்கின்றது. இந்த நிலையில்தான் எம் வாழ்வை மீட்டெடுக்க இறைமகன் இயேசு மானுட உருவில் எம்மிடையே அவதரித்தார்.


**“உள்ளத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக’(லூக். 2: 13-14)**

என்று அந்த விண்ணகத் தூதர்கள் கடவுளைப் புகழ்ந்து பாடினார்கள். கிடைக்குச் சாமக் காவல் காத்த அந்த அப்பாவிப் பாமர இடையர்களுக்கு அந்தச் செய்தி கிடைக்கின்றது. கடவுள் நல்ல மனங்களைத் தேடுகின்றார். உங்களுக்காக ஒரு மீட்பர் பிறந்துள்ளார் என்று மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி எம் வாழ்வில் ஒரு மாற்றத்தைக் காண, ஒரு புதிய விடியலைக் காண எம் தேசமும் இந்தப் போதைகளிலிருந்து விடுபட்டு புதிய ஆண்டில் 2026ம் ஆண்டில் எம் வாழ்வை வளமாக்குவோம்.

# முகமற்ற முகங்கள்

(திரைப்பட மதிப்புரை)

**மனிதர்களாக வாழ வளப்படுத்தும் அதே மக்களுக்குத் தனது உயிரைக் கொடுத்தார். இறைவனுக்கு முகமில்லை, ஆனால் ஒடுக்கப்பட்டவர்களின் முகங்களைக் கொண்டுள்ளார்**




அருட்பணி A.F.X. ஜெயசேகரம்

இவ்வருட நவம்பர் 21 தொடக்கம் திரைகளில் ”முகமற்ற முகங்கள்” கண்கலங்க வைக்கும் ஒரு திரைப்படம் வெளிவந்துள்ளது. தொடக்கத்தில் இது ஹிந்தி மொழியில் தயாரிக்கப்பட்டது. பின்னர் தமிழ், தெலுங்கு மொழியில் வெளிவந்துள்ளது. மற்றைய திரைப் படங்கள் போன்றதல்ல. இது ஒஸ்கார் உட்பட 120 பன்னாட்டு விருதுகளைப் பெற்றது. இதன் படைப்பாளி சந்திரா டி சேசாரமண. இதன் முதல் தனித்துவம் இதில் ஒரு கதாநாயகி கதாநாயகன் இல்லை மறைந்திருப்பவர். இறைவன் அடுத்ததாக இது ஒரு முழுமையான வரலாறு.

ராணி மரியா, ஒரு தியாகியாக இந்தூரில் (ஆந்திரா) வாழ்ந்து 1995 இறந்த கேரளாவைச் சார்ந்த ஒரு பெண் துறவியின் கதை. இவர் அபரிமிதமான இரக்கமும் பல சவால்களையும் தாங்கிக் கொள்ளும் பக்குவப்பட்டவள். இராணி மடத்திற்கு முதல்வராகப் பொறுப்பெடுத்த தொடக்கத்துடன் கதை நகர்கிறது. அங்கே உள்ள ஊர் மக்கள் பூர்வீகக் குடிமக்கள். ஒரு சில அமைப்புகளினதும் பணம் படைத்த முதலைகளின் நிலச் சொந்தக்காரர்களின் அட்டூழியங்களுக்கும் சுரண்டலிற்கும் ஒடுக்கு முறைகளுக்கும் இரையானவர்கள்.

கலாசார வாழ்வு முறையைப் பார்த்தவர்களுக்கு தாங்களும் ஏதாவது செய்ய வேண்டுமென்று உந்தல் கொடுக்கும் நிகழ்வாக இருக்கும். இவ்வாறான சவால்களை ராணி அவர்கள் படிப்படியாக களைய முயற்சி எடுத்தார். குரல் அற்றவர்களை மாற்றம் பெற உதவியது. சட்ட ரீதியாக வழிமுறைகளைப் பயன்படுத்தி, வன்செயல் தழுவாமல் அநீதிகளுக்கு எதிராக மக்களில் பலத்தை ஒன்றிணைத்து, ஒரு அகதியாகத் திரட்டுவதில் முனைப்பாக இருந்தார். ஆனால் நில முதலாளிகளின் கைகயில் உயிர்க் கொடையாளியாக மாற வேண்டிய தாயிற்கு இப்படம் சமயச் சார்பற்ற முழுக்க முழுக்க சமூகம் சார்ந்தது.

இதில் கதாநாயகி பெண் துறவியாக இருப்பினும் அவள் சார்ந்த சமயம் இயேசுக்கிறிஸ்துவின் பெயர் முற்று முழுதாகத் தவிர்க்கப்பட்டு, இந்திய தற்கால சூழலுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

ராணி மரியாவின் பாத்திரத்தின் நடிப்பு இயல்பானதாகவும், பெண்கள் குரலின் நடிப்பும் பாராட்டுக்குரியது. பின்புலத்தின் இசை மக்களின் குமுறல்களை வெளிப்படுத்தும் ஒரு சோக உணர்வைப் பிரதிபலித்தது. இதயத்தைத் தொடுவதாக உடனடியாகத் துடிதுடிப்புடன் செயற்பட தூண்டி நின்றன. இப்படம் எம்முன் புதைந்திருக்கும் மானிடத்தை மனிதத்தை நடிகர்கள் மூலமாக வெளிப் படுத்தியது. பொதுவாக இப்படம் இதயத்தையும், உள்ளங்களையும் பெரும் மானுடத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது இப்படத்தின் முழு வெற்றி எனலாம். இப்படம் கத்தோலிக்கத்திற்கல்ல, துறவிகளுக்கல்லை ஆனால் ஒவ்வொரு மனிதனுக்கும் இது ஒரு வீரப் பெண்ணின் புனிதராக வரலாற்றுக் கதை. தன்னம் தனியாக ஆனால் இறைவன் துணையுடன் செய்து முடித்தார். இவர் ஒரு உயிர்க் கொடையாளி.

**அவள் தனது வாழ்வை முகங்கள் அற்ற இறைவனின் பிள்ளைகளுக்கு அர்ப்பணித்தவர். இறுதியாக தனது விலை உயர்ந்த உயிரைக் கொடுத்து குருதிக்கு விலையானாள்**

# வாக்கு - புதிய உடன்படிக்கை

கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வில் மையமாக இயேசுக் கிறிஸ்துவின் பிறப்புச் செய்தி இன்றும் உயிரோட்டமுள்ள உறவாகக் காணப்படுகின்றது. இது ஒரு வரலாற்றுச் சம்பவம் மட்டுமல்ல. கடவுளின் மீட்புத் திட்டத்தின் வெளிப்பாடாகவும், மனித குலத்தின் மீட்பிற்காக வரலாற்றில் கடவுள் நுழைந்த தருணமாகவும் காணப்படுகின்றது.

யோவான் 1ம் 14 - "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்" அவரது மாட்சியை நாங்கள் கண்டோம் அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் எனும் நிலையில் மாட்சியைப் பெற்றிருந்தார்" எனும் இவ் இறைவார்த்தைகள் கடவுள் மனித வடிவில் உலகில் வாழ்ந்தார் என்பதை வெளிப்படுத்துகின்றது. இது மனிதனைத் தேடி வரும் கடவுளின் அன்பின் உச்சக்கட்டமாகப் பார்க்கப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் மீது கடவுளின் அன்பின் உச்சம் புதிய உடன்படிக்கையின் வாக்குறுதியாகக் கொள்ளப்படுகின்றது. எரேமியா 31: 31 "இதோ நாட்கள் வருகின்றன. அப்பொழுது நான் இஸ்ராயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வேன்" என்கிறார் ஆண்டவர்

எனவே இஸ்ராயேல் மக்களின் வழியாகத் தொடங்கிய கடவுளின் மீட்புத் திட்டம் அவருடைய ஒரே மகனாகிய இயேசு வழியாக உலகம் முழுவதுக்கும் சென்றடைந்தது. இஸ்ராயேல் மக்களோடு நடந்துகொண்ட கடவுளின் உறவு உலக மக்களுக்கான கடவுளின் இதயத்தை வெளிப்படுத்தும் கண்ணாடியாய் புலப்படுகின்றது.

கடவுளின் அன்பின் வெளிப்பாட்டைக் காண்கின்றபோது தனிநபர் அன்பாக, சமூக அன்பாக, மீட்பின் அன்பாக, பணி அழைப்பின் அன்பாகக் காணப்படுகின்றது. இது பின்னர் கிறிஸ்துவில் முழுமையடையும் அன்பாய் வெளிப்படுகின்றது.

கடவுளின் அன்பு வெறும் வார்த்தை அல்ல. அது வரலாற்றின் செயலாக வெளிப்படுகிறது. "நான் அவர்களின் துன்பங்களைக் கண்டேன்" எனும் வார்த்தைகள் கடவுள் மனிதரின் துயரத்தை நோக்கி செயற்படுபவராகக் காட்டப்படுகின்றது. விடுதலைக்கான வழியை நோக்கிச் சென்ற கடவுளின் திட்டமாகக் காணப்படுகின்றது.

அந்த வகையில் இயேசுவின் பிறப்புச் செய்தி கடவுளின் மீட்பு வரலாற்றின் முடிவுப் பக்கங்களின் முக்கிய திருப்பமாக உள்ளது. கிறிஸ்தவ இறையியல் பார்வையில் கிறிஸ்து பிறப்பு இன்றுவரை மனித வாழ்வின் அர்த்தத்தையும், நோக்கத்தையும் மாற்றும் ஆழமான உண்மையாகிறது. கிறிஸ்துவின் பிறப்போடு மானிடரின் வரலாற்றில் புதிய படைப்பைத் தொடங்குகின்றது. ஆதாம், கொண்டு வந்த வீழ்ச்சியைப் புதிய ஆதாமாகிய கிறிஸ்து எழுச்சியாக்குகின்றார்.

கலாத்தியர் 4: 5 "கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்" இந்த இறைவார்த்தை வெளிப்படுத்துவது ஒரு சீரான வரலாற்றுச் சம்பவம் அல்ல. மாறாக இறை அறிவின் திட்டமிட்ட நுழைவு. யோவான் 1: 14 - வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். இது கற்பனைக் கடவுளின் சாயல் அல்ல. ஆதியிலிருந்த வார்த்தையானவர் மனிதனின் உடல், மனம், வேதனை, உணர்வுகளைக் கொண்ட ஒருவராகி வந்தவர் என்பதைக் காட்டுகின்றது.

இயேசுக்கிறிஸ்து கன்னிமரியாளிள் ஊடாக மனித வடிவெடுத்து மனிதரின் பாவமாசு மரபில் இல்லாமல் புனிதத்துவத்தில் இருந்து நூறுவீதம் கடவுளாகவும் நூறு வீதம் மனிதராகவும் உலகிற்கு வந்தார். இயேசு உலக அரசர்களின் பெருமைக்கு எதிராக, கடவுளின் தாழ்மையின் வெளிப்பாடானவர் (பெத்லகேம் எபிரேயத்தில் "அப்பத்தின் வீடு" என்று அழைக்கப்பட்ட ஒரு இடத்தில் சாதாரணமான ஒரு குடிசையில் பிறந்திருந்தார். அந்த பிறப்புச் செய்தி மனிதரில் இருந்த பாவமரபின் சங்கிலியை உடைக்கிறது. அவர் வருவது மனிதன் தனது சொந்த வலிமையால் ஒருபோதும் மீட்புப் பெறமுடியாது என்பதற்கான சாட்சி.

எனவே ஆதாமில் தொடங்கிய பாவத்தின் விலைவைக் கழைய இயேசுவின் பிறப்பு பாவ இருளை உடைக்கும் உலகின் மீட்புச் செய்தியாகிறது. இந்தச் செய்தியினது இறைத்திட்டம் மனித வாழ்வின் திசையை மாற்றும் நித்திய உண்மை. வாழும் வரலாறு. ஆகவே தாழ்மையைக் காட்டிய அவரது பிறப்பு ஒவ்வொரு மனித வாழ்வும் காணும் சிறப்பாகட்டும்.

**அருட்பணி C.G.றொகான்**

# திருத்தந்தை 14ம் லியோவின் கூட்டொருங்கியக்க கிறிஸ்மஸ்



திருத்தந்தை 14ம் லியோ அண்மையில் வெளியிட்ட "உங்களை நேசிக்கிறேன்" (Dilexi te) என்ற அப்போஸ்தலிக்க திருமடலும் மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய "அவர் எங்களை அன்பு செய்தார்" (Dilexit nos) என்கின்ற இறுதி அப்போஸ்தலிக்க திருமடல் உலக ஏழைகளுக்கும் திருஅவையின் ஏழைகளுக்கும் மீட்பைக் கொணரும் திருமடலாகக் காணலாம்.

இவ்விரு திருமடல்களின் செய்திகளே இன்றைய கிறிஸ்மஸ் செய்தியாக அமைய வேண்டும். ஏழைகள் இன்று பொருளாதார, கலாசார, அறிவியல், விஞ்ஞானவியல் எனப் பலதரப்பட்டுக் காணப்படுகின்றனர்.

சமூகத்தில் எல்லைகளுக்கும், விளிம்புகளுக்கும், ஒதுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்ட நிலைகளில் என ஏழைகள் பெருகுகின்றனர். இவர்கள் தொடர்பு சாதனங்கள் பார்வையில் விழுவதில்லை. இவர்களின் அழுகைக்குரல் இறைவனின் சந்நிதிக்கு மட்டுமே எட்டுகின்றது. இவர்களின் இன்றைய அழுகுரலை அன்று பெத்லேகேமின் கழுதைகள், புள்ளினங்கள், மந்தைகள் அங்கு இரைச்சலிட்ட சிறிய பூச்சி இனங்களுக்கு ஒப்பிடலாம்.

இப் பெத்தலேகேமின் குகை மூன்று அரசர்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் வான ஒலிகளுக்குமே இன்று சொந்தம் போன்று கிறிஸ்மஸ் கொண்டாடப்படுகின்றது. பணம் உள்ளவன் கிறிஸ்மஸைக் கொண்டாட, பணம் அற்றவர்களும் பாசாங்கு செய்து கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களைச் செய்து தங்கள் வருவாய்களைச் செலவிடுகின்றனர். எவரும் உண்மைக் கிறிஸ்மஸை நோக்கிப் பயணிப்பதில்லை. இயேசு பாலனைச் சூழநின்று சப்தமிடுகின்ற ஏழைப் பூச்சிகளின் குரலைக் குழந்தை இயேசு கேட்டது போல நாமும் ஏழைகள், கைவிடப்பட்டோர் மீது பரிவிரக்கம் கொண்டு கூட்டொருங்கியக்கக் கிறிஸ்மஸைக் கொண்டாடி மகிழவேண்டும்.

**அருட்பணி ஜெ.இ.ஜெயசீலன்**

# பாலா நீ மீண்டும் மண்ணில் பிறக்க வேண்டும்

மாறிவரும் உலகமும்
மாறுகின்ற மனிதமும்
இவ்வுலகில் மாற்றம் காண
பாலா நீ மீண்டும்
மண்ணில் பிறக்க வேண்டும்


போதைக் கலாசாரங்களும்
போக்குவரத்து விபத்துக்களும் - மிதமிஞ்சிப் போன
அரசியல்வாதிகளின் சாமர்த்தியப் பேச்சுக்களும்
அதிகரிக்கும் உலகில்
இப் பிரபஞ்சம் மாற்றம் காண
பாலா நீ மீண்டும் மண்ணில் பிறக்கவேண்டும்

நீதிமன்றத் தராசில் பணமும் பதவியும் மேலோங்க
நீதிமறந்த மனிதம் மண்ணில் புதைக்கப்பட்டு
நீதி நிலைநாட்ட
இலத்திரனியல் சாதனங்கள் மூளையை மழுக்க
மனிதம் இவற்றிலிருந்து மாண்புடன் மீண்டெழ
பாலா நீ மீண்டும் மண்ணில் பிறக்க வேண்டும்

தொலைபேசிக்காதல் தொல்லைகளாகி
மனிதர்களைத் தொலைதூரமாக்க
மாண்பின்றி வாழும் மனித குலங்கள்
மீண்டெழுந்து மாண்புள்ள மனிதர்களாக
பாலா நீ மீண்டும் மண்ணில் பிறக்க வேண்டும்

அமைதியோடு மனிதம் வாழ
போர் முழக்கங்கள் இன்றி
சமாதானம் மிளிர
இடியோசையை மிஞ்சும்
வெடியோசைக் கலாசாரம் ஒளிய
பாலா நீ மீண்டும்
மண்ணில் பிறக்க வேண்டும்

இயற்கையின் சீற்றம்
போர் முழக்கங்களாக அதிகரிக்க
அமைதியின்றிய இச்சமுதாயம்
அமைதி பெற
எத்திசையும் சமாதானம் மிளிர
பாலா நீ மீண்டும்
மண்ணில் பிறக்க வேண்டும்



**அருட்சகோதரன் எ.எறிக் நிஷான்**

# ஒரு மழை நாள்

சிறுகதை

றேச்சல். ம

மாலை மழை பெய்து ஓய்ந்திருந்தது. அவள் நின்று கொண்டிருந்த நடைபாதையின் பின்னணியில் தொடருந்தாய் அடுக்கப்பட்டிருந்த சிறு கடைகளின் கூரைகளில் தேங்கி ஒழுகியபடி சில நீர்த்துளிகள், அவற்றைத் தீண்டிவிடாமல் இங்குமங்குமாய் லாவகமாக வளைந்து செல்லும் நடைபாதை மனிதர்கள், ஐந்தே நிமிடங்களில் அனாவசியத் தொல்லையாய் மாறிப்போன அவர்களின் குடைகள் என "பெட்டா" பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. மழைக் குளிருக்குத் தப்பி ஒளிந்திருந்த தெருநாய்கள் ஆங்காங்கு தலை காட்டி, உடலை சிலிர்த்து உலர்த்திக்கொண்டன. மின்சாரக் கம்பி வடங்களில் அமர்ந்து, நனைந்து தோய்ந்திருந்த காக்கைகள் இங்கொன்றும் அங்கொன்று மாய்த் தத்தியபடி, சாலையோரக் குப்பைகளைக் கிளறத் தொடங்கின.

அழுக்குச் செறிந்த நகரின் இப்பகுதி, மழைக்காலங்களில் அவள் முகம் சுழித்து, தோள் உயர்த்தி, உதட்டைப் பிதுக்கி உச்சரிக்கும் 'நரகங்களின்' தலையாகிவிடும். அவளின் போதாத காலம், கிறிஸ்துமஸ் விடுமுறைக்காக வீடு சென்று கொண்டிருந்த அந்த வெள்ளிக்கிழமை மாலையில் அந் நகரகத்தின் இதயமான பேருந்து நிலையத்தில் சிக்கிக் கொண்டாள். அன்று தொடங்கிய வருட இறுதி கிறிஸ்துமஸ் விடுமுறை அவள் போன்ற கொழும்பு நகர வாசிகளைத் தத்தமது சொந்த ஊர்களை நோக்கிக் கிளப்பியிருந்தது. இந்தப் பரபரப்புடன் மழை நாளும் சேர்ந்து கொள்ள, 'பிக்-மீ', 'ஊபர்' காரரும் கடும் பிஸியாக மாறிவிட, அவளின் முச்சக்கரவண்டி அழைப்பை ஏற்றுக்கொள்ள ஒரு சாரதியும் முன்வரவில்லை. நகரத்தின் பிசுபிசுப்பு ஒருபுறம், அடுத்த மழைக்கு அடுக்குப் பண்ணும் அடிவானம் ஒருபுறம், மழையில் அகப்படாமல் எப்படியேனும் வீடு செல்லும் பேருந்தைப் பிடித்து விட வேண்டுமென்ற பதைபதைப்பு மறுபுறமென என்று நெரிக்க, அவள் சினக்கத் தொடங்கினாள்.

***

"அப்பா? ஸ்க்ரப்பர் வாங்கச் சொன்னனே, எங்க?" லீலா அன்ரி சமையலறையில் இருந்து குரல் கொடுத்தார். பதில் எதுவும் வரவில்லை. "அப்பா!" - இப்போது அவர் தொனி பட்டாசு போல வெடித்தது. வெளி விறாந்தையில் ஒய்யாரமாக அமர்ந்து மழை வெள்ளத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரட்ணம் அங்கிள் அதிர்ந்து போய் நனவுலகிற்குத் திரும்பினார்.

"ஏனப்பா கத்துறீங்க! மழச் சத்தத்தில ஒண்டும் கேக்கயில்ல" என்றபடி எழுந்து சமையலறைக் கதவோடு வந்து சாய்ந்தார்.

"என்ன?".

"ஸ்க்ரப்பர் வாங்கச் சொன்னனே வாங்கேல்லயா? இதுக்க காணேல்ல" - மழை தொடங்கச் சற்று முன்னதாக ரட்ணம் அங்கிள் கொண்டு வந்து இறக்கியிருந்த மாதாந்தப் பலசரக்குப் பொதியைக் காட்டியபடி நின்றார் அன்ரி. அங்கிள் உடனடியாகச் சப்பாணம் கட்டி அமர்ந்து கொண்டார், "இஞ்ச விடுங்கோ, ஒழுங்கா பாக்கவும் தெரியா" என்றபடி. மும்முரமாகத் தேடி ஏற்கனவே முடிச்சு அவிழ்க்கப்பட்டிருந்த துப்புரவாக்கிகள் இருந்த சிறிய பொதியைக் கண்டுபிடித்தார். அலட்சியப் புன்னகை ஒன்றுடன் உள்ளிருந்து ஒரு வெள்ளிக் கம்பிச் சிக்கலை எடுத்து நீட்டினார்.

கைகளைக் கட்டியபடி அவரின் கண்டுபிடிப்புக்காகக் காத்திருந்த லீலா அன்ரிக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

"இதென்ன இது?"

"ஸ்க்ரப்பர்?" "உம்மட தல", அன்ரி தன் வலது கையின் விரல் நுனிகளால் அங்கிளின் நெற்றியைத் தள்ளி முகத்தைச் சுழித்துக் கொண்டார். "மோட்டு மனுசா, இது ஸ்டீல் வூல் எல்லே?"

அங்கிளின் முகத்தில் அலட்சியச் சிரிப்பு மறைந்து அசடு வழிந்தது.

***

"இது சரி வராது போல. பேசாம பஸ்ஸில தன்னும் ஏறுவம் மழைக்கு முதல்", தனக்குத் தானே எண்ணிய படி அவள் கோட்டைப் புகையிரத நிலையத்தின் பக்கமாக நடக்கத் தொடங்கினாள். புகையிரத நிலையத்தின் முன், நூறு அல்லது நூற்றியொன்று பேருந்திலேறி வெள்ளவத்தை செல்வதே புதிய திட்டம். வெள்ளவத்தையில் தங்கியிருந்த அறையிலிருந்து பயணப் பையைக் கைப்பற்றிக்கொண்டு அங்கிருந்து விசா பிள்ளையார் முன் வரிசை கட்டி நிற்கும் யாழ்ப்பாண ஏ.சி பஸ்சில் ஏறிக்கொள்ளலாம் என்று நினைத்த படி வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

எப்போதும் போலவே, அவள் திட்டத்தை மாற்றிக்கொண்டு நடக்கத் தொடங்கி ஐந்தாவது நிமிடத்தில் அவளின் கைபேசி சிணுங்கியது. யாரோ ஒரு ஊபர் காரன் அவள் அழைப்பை ஏற்றுக் கொண்டிருந்தான்.

"ஆண்டவருக்கு நன்றி" - அவள் மனதினுள் சொல்லிக் கொண்டு நீர்க்குட்டைகள் அதிகம் தேங்காத நடைபாதைப் பகுதியாகப் போய் ஒதுங்கிக் கொண்டாள். சாரதி வந்து சேர எட்டு நிமிடங்கள் ஆகுமென ஊபர் செயலி சாத்திரம் சொல்லியது. கைபேசியையும் கைக்கடிகாரத்தையும் அடிவானத்தையும் மாறி மாறி நோட்டம் விட்டபடி நின்ற அவளை ஒரு மனிதர் நெருங்கி வந்தார்.

***

"ஏன் இதால துடச்சா ஊத்த போகாதோ" ரட்ணம் அங்கிள் சாடையான எரிச்சலுடன் கேட்டார். "புதுப் புதுப் பேர் வச்சு ஒரே சாமானுக்குக் காசு குடுக்காட்டி உங்களுக்கு விடியாது" - 'நைசாக' அன்ரி மீது பழி சுமத்திக் கொண்டு தப்பிவிடலாம் என்பது அவர் கணக்கு.

"என்ன புறுபுறுக்கிறியள்?" லீலா அன்ரி அங்கிளிடமிருந்து அந்த வெள்ளிக் கம்பியை வாங்கிய படி கேட்டார்.

"ஸ்பொஞ் எண்டு தன்னும் சொல்லி இருக்கலாம், எனக்கு விளங்கி இருக்கும். சும்மா ஸ்க்ரப்பர் ஸ்க்ரப்பர் எண்டா, நான் நல்லா ஸ்க்ரப் பண்ணும் எண்டு இத வாங்கினன்…" அங்கிள் இழுத்தார்.

"ஸ்பொஞ் சரியான சொப்ட் ஆன சாமானப்பா. அதால தேச்சு ஊத்த போகாது. இஞ்ச பாருங்கோ," அவர் கையில் ஏற்கனவே வைத்திருந்த பாதி தேய்ந்து நூல்-நூலான ஸ்க்ரப்பரைக் காட்டியபடி அன்ரி சொன்னார். "இது தான் ஸ்க்ரப்ப், கொஞ்சம் சொரசொரப்பான சாமான், ஆனா மெல்லிய மட்டீரியல், இதால துடச்சா ஊத்த போகும் வடிவா. நீங்க கொண்டு வந்திருக்கிறது, சட்டி பான கழுவிற சாமான், இதால துடச்சா கிளாஸ் சாமான் எல்லாம் கீறி நல்ல புது டிசைனா தான் இருக்கும்" சொல்லிக் கொண்டே அந்த வெள்ளிக் கம்பியை அங்கிளின் மடியில் தூக்கிப் போட்டார் லீலா அன்ரி.

"உந்த விளக்க வகுப்ப சாமான் வாங்கப் போகேக்க எடுக்க வேண்டிய தானே?" அங்கிள் கோபித்துக் கொண்டார்.

"அறுவது வயது, ரிட்டயட் மாஸ்ரருக்கு மூள கொஞ்சம் வேல செய்யுமெண்டு நினச்சன்" அன்ரி கொடுப்புக்குள் சிரித்தபடி கூறினார்.

"என்ர மூளைக்குக் கத சொல்லாட்டி இவக்கு விடியாது" அங்கிள் மீண்டும் புறுபுறுத்தார்.

"விசர் அலம்பல விட்டுட்டு அடுத்த மழைக்கு முதல் போய் அத வாங்கிக் கொண்டு வாங்கோ" அன்ரியின் உத்தரவு அங்கிளுக்கு வேப்பிலைச் சாறாய் கசந்தது. "சும்மா போங்கப்பா அங்கால! மனுசர ஒரு கொஞ்சம் ஓய்வா இருக்க விட மாட்டியள்!" அவரின் வேடிக்கையெல்லம் விடைபெற்றுக் கொள்ள அங்கிள் சினந்தார். "நாளைக்கு வாங்கலாம். இந்த மழைக்க திரும்பி போக எனக்கு ஏலா".

"ஓஞ்சிருக்க விடேல்லயோ?" அன்ரிக்கு சிடுசிடுவென்று ஏறியது. "அப்ப நாங்கள் என்ன சொல்லுற? ஒரு நிமிசம் கால் நீட்டி இருக்க நேரமில்லாம சுழண்டு கொண்டு இருக்கிறன் நான், உதவி எண்டு வீட்டில ஒரு துரும்பு அசைக்க மாட்டினம், செய்யிற ஒரே வேல சாமான் வாங்கிற தான், அதயும் ஒழுக்காச் செய்யிற இல்ல, பிறகு நியாயம் பிளக்கிற இஞ்ச.." அன்ரி படபடவென்று பொரிந்தார்.

"ஷோ கேசுல கிடந்த மாபிள் பிளேட் எல்லாம் துடச்ச பாதி துடைக்காத பாதியா கிடக்கு, நாளைக்கு இதில நிண்டு துடைக்க எனக்கு நேரமில்ல, நான் கோயிலுக்குப் போக வேணும். மரியாயின் சேனைக் கூட்டம் இருக்கு, கிறிஸ்மஸ் வேல ஆயிரம் கிடக்கு. உங்களுக்கு இப்ப வாங்க ஏலாட்டி, நாளைக்கு வாங்கி நாளைக்கு நீங்களே துடைச்சு அடுக்குங்கோ" அன்ரி சள்ளென்று பாய்ந்து விட்டு விறாந்தைப் பக்கம் சென்று விட்டார்.

மனைவி மீது பொங்கும் கோபம் ஒரு புறம், அவர் சொன்னதைச் செய்யாவிட்டால் அடுத்த நாள் கூட்டல்-துடையல் வேலை தன் தலையில் பொறித்து விடும் என்ற எரிச்சல் ஒரு புறம், மழைக் குளிரில் ஆறுதலாக அமர்ந்து ஒரு கோப்பை தேநீர் அருந்த முடியவில்லை என்ற விரக்தி ஒரு புறமென்று, ரட்ணம் அங்கிள் புகைந்து கொண்டிருந்தார். ஒப்பீட்டளவில், அடுத்த நாள் வேலையை விட இப்போது சட்டென்று போய் ஒரு ஸ்க்ரப்பரை கொண்டு வருவது நல்லதென்று அவர் மூளை சொன்னது. புகைந்து கொண்டே களிசானைக் கொழுவிக்கொண்டு புறப்படத் தயாரானார்.

"எங்க அந்த பழைய ஸ்க்ரப்பர் கோதாரிய தாங்கோ, பாத்துக் கொண்டு வாரன். பிறகு ஸ்பொஞ்கிஞ் எண்டு எனக்கு வகுப்பு எடுக்க வருவியள்" அங்கிள் புறுபுறுத்தபடி பழைய ஸ்க்ரப்பரை எடுத்து ஒரு பொலித்தீன் பையில் சுற்றி தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு அருகிலிருந்த ஆப்பிகோ அங்காடியை நோக்கி நடையைக் கட்டினார்.

***

"அம்மா…"

அவள் கேட்காதது போல கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி நின்றாள்.

"அம்மா.." அந்த மனிதர் மீண்டும் ஒரு முறை அழைத்தார். வேறு வழியின்றி கண்களை நிமிர்த்தி 'என்ன' என்பது போலப் பார்த்தாள். மெலிந்த, முறுக்கேறிய உடல்வாகு, தலையோடு ஒட்டி வெட்டிய, ஆங்காங்கு நரை தெறித்த கேசம், பல ஆண்டுகளின் மழையும் வெயிலும் கண்டு நிறம் மங்கிப் போன ஒரு பச்சை மேற்சட்டை, 'கமே' மனிதர்களின் பாணியில் நீலமும் செம்மஞ்சளும் சேர்ந்த சாறம், கையில் 'இதோ அறுந்து விடுகிறேன்' என்பது போல தொங்கிக் கொண்டிருந்த அழுக்கேறிய இளஞ்சிவப்பு நிறப் பயணப்பை. அந்த மனிதனைக் கண்ட மாத்திரத்தில் அவளின் உள்ளுணர்வு அவளை அங்கிருந்து நகரச்சொன்னது.

"அம்மா பலாங்கொடக்கு போற பஸ் எங்கனக்குள்ள நிக்கு?" அந்த மனிதன் பேசிக்கொண்டிருந்த போதே அவள் அங்கிருந்து விலகிச் சென்றாள். அவள் முன் யாருமே இல்லாதது போல. அந்த மனிதனின் குரல் அவள் செவிகளில் விழாதது போல. அவர் மனிதனே அல்ல என்பது போல. கண்களில் வலியேறிய அந்த மனிதன் தன் ஆற்றாமையை ஒரு சிறு தலையசைவாய் அவள் பாதங்களில் உதிர்த்து விட்டுச் செல்வதைக் கவனியாதவள் போல.

"இவங்கள மாரி ஆக்களுக்கு கத குடுத்தா காசு கேப்பாங்கள்" - தனக்குத் தானே கூறிக்கொண்டாள்.

"ரீம் ஆ வந்து பஸ் ஸ்டாண்ட் வழிய நிண்டு அத இதச் சொல்லி சனத்திட்ட காசு பறிக்கிற" - அவளது விளக்கம் விரிந்தது.

"காசக் கொண்டே போத்தல் தான் வாங்குவாங்கள்" அவள் தீர்ப்பளித்து முடிக்கவும் முச்சக்கர வண்டிச் சாரதி வந்து சேரவுன் சரியாக இருந்தது.

(தொடர்ச்சி 14ம் பக்)

## ஒரு மழை நாள்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் எண்ணம் அந்த மனிதனின் சுபாவத்தை மதிப்பீடு செய்யும் நடுவர் பதவியில் இருந்து சட்டென்று பறந்து வந்து ஒரு மகளாக மாற்றிக் கொள்ள, வீட்டாருக்கு ஏதேனும் கிறிஸ்மஸ் இனிப்புக் களை வாங்கிச் செல்லலாம் என்று எண்ணியபடி முச்சக்கர வண்டியில் ஏறும்போதே ஆர்ப்பிக்கோ அங்காடியில் கொஞ்சம் தரிக்குமாறு சாரதியிடம் கேட்டுக்கொண்டாள்.

பலாங்கொட செல்லும் பஸ் ஒன்றைத் தேடி நடந்து கொண்டிருந்த அந்த மனிதனையும் அறும் தறுவாயிலி ருந்த அவரின் இளஞ்சிவப்புப் பையை யும் விலத்தியபடி, தனக்கேயுரிய கர்ண கடூரமான ஒலியுடன் முச்சக்கர வண்டி ஆர்முடுகியது.

* * *

ஆர்ப்பிகோ அங்காடியில் மாடிப்படி யோரமாக ஸ்பொஞ் வகைகள் அடுக்கியிருந்த றாக்கைப் பக்கமாக ரட்ணம் அங்கிள் நின்று கொண்டி ருந்தார். அவர் கொண்டு வந்திருந்த சாம்பிள் கடுமையான பாவனைக்கு உட்பட்டு உருமாறியிருந்தது. சாம் பிள் இருந்த பொலித்தீன் பையை றாக் கையின் ஒரு பக்கம் வைத்து விட்டு ஒவ்வொரு ஸ்பொஞ் ஆக எடுத்து 'மட்டீரியல் டெஸ்ட்' செய்து கொண்டி ருந்தார். தவறாக எதையும் வாங்கிச் சென்றால் அன்றி மீண்டும் எரிந்து விழுவார் என்ற எண்ணம் வேறு. குழம்பிப் போய் அதையும் இதையும் தூக்கி நோட்டம் விட்டுக் கொண்டி ருந்த போது அவளைக் கண்டார். அந்தப் பெண் முதலாம் தளத்தில் எதையோ கொள்வனவு செய்து விட்டு கொஞ்சம் விரைவாகக் கீழே வந்து கொண்டிருந்தாள். அவசரமாக செல்லும் அவளைத் தடுத்தால் தவ றில்லையோ என்று யோசித்தாலும், வேறு வழியின்றித் தயங்கித் தயங்கிக் கூப்பிட்டார்.

"அம்மா, பிள்ள இஞ்சே.."

"என்ன அங்கிள்? சொல்லுங்க"

அந்தப் பெண் நின்று திரும்பிப் புன்னகைத்தாள்.

"பிள்ள இந்தத் துடைக்கிறதும் இது வும் ஒண்டே?" தனது சாம்பிளையும் தான் தெரிவு செய்திருந்த ஸ்க்ரப்பரை யும் காட்டிக் கேட்டார்.

"பாப்பம் அங்கிள்?" அவள் கூறிக கொண்டே தன் கையிலிருந்த சுகர்-பிரீ பிஸ்கட்டுகளை றாக்கையில் வைத்து விட்டு அந்த முதியவரின் கைகளில் இருந்த பொருட்களை வாங்கிப் பார்த்-தாள். "ஓம் போல தான் கிடக்கு அங்கிள்" அவள் சொல்லிக் கொண்டே வேறு சில ஸ்க்ரப்பர்களையும் தொட்டுப் பார்த்துப் பரிசோதித்தாள்.

"பிள்ள இதுவா இருக்குமோ?" அந்த முதியவர் ஸ்பொஞ் ஒன்றை எடுத்துக் காட்டினார். "இல்ல அங்கிள், அது கொஞ்சம் தடிப்புக் கூட, நீங்க முதல் எடுத்த சாமான் சரி தான்" - தன் ஸ்க்ரப்பர் சாத்திரத்தின் இறுதி முடிவை வெளியிட்டாள்.

அந்த முதியவர் முகம் சற்றுத் தெளிந்தது.

"வீட்டில இதே போல வாங்கிக் கொண்டு வரச் சொல்லிச் சொன்னவா. மாறிக் கொண்டு போனா பிறகு தெரியாதா.." அவர் சிரித்துக் கொண்டு சொன்னார்.

"தாங்க்ஸ் அம்மா".

"ஐயோ பறவாயில்ல அங்கிள், இதுல என்ன இருக்கு" அவள் புன்னகையுடன் கூறினாள்.

"இது தான் பொம்பிள பிள்ளைகளிட்ட தயங்காம உதவி கேக்கலாம்.

பெடியள் பறந்து பறந்து ஏதென் சொல்லிப் போட்டு ஓடுவாங்கள். பொம்பிளப் பிள்ளைகள் தான் நிண்டு நிதானமா பதில் சொல்லுற... தாங்க்ஸ் எடா, நான் வாறன்" மீண்டும் புன்னகைத்து விட்டு முதியவர் காசாளர் பக்கம் நகர்ந்தார்.

அவள் ஆணியடித்தது போல அசையா-மல் நின்றாள். தன் தகப்பனுக்காகத் தேடி வாங்கிய சீனியற்ற மாச்சில்லுப் பொதிகள் அவள் வைத்த இடத்தில் உறைந்து போயிருந்தன.

"பெண் பிள்ளைகள்"

"தயங்காமல் உதவி கேட்கலாம்"

"நின்று நிதானமாகப் பதில் சொல்லுவார்கள்"

அவளால் நகர முடியவில்லை.

* * *

பெற்றா பேருந்து நிலையத்தில் ஒரு முதியவர். அறும் தறுவாயிலிருந்த தன் இளஞ்சிவப்புப் பையை இறுகப் பற்றியபடி பலாங்கொடை செல்லும் பேருந்து நிறுத் தத்தை தேடிக் கொண்டிருந்தார். மழைக்கு முன் பேருந்தில் ஏறிவிட்டால் பையினுள் இருக்கும் பொம்மையை நனையாமல் பேர்த்தியிடம் கொண்டு சேர்த்து விடலாம் என்று ஒரு எண்ணம் அவர் மனதில் வெட்டிப் பாய்ந்த அதே நொடியில் வானம் கிழிந்துபேய் மழை கொட்டத் தொடங்கியது.

பின்னேர மழை, இலகுவில் ஓயாது.

## துயர்களை துடைத்திட வந்திடு பாலகா!



ஈசாயின் தளிரினில் துளிர் ஒன்று மலர்ந்ததுவே
காரிருள் போக்கிடவே காலமதில் பிறந்தாரே
மரியன்னை மடியினிலே ஒளியாக அவதரித்தார்
மாந்தர் என்றும் மாட்சியினை அடைந்திடவே

காலாதி காலமாய் எதிர்பார்த்த மெசியா
காலம் நிறைவுற்ற போது மனுவானார் மண்ணகத்தில்
கனிவுள்ளம் கொண்டு பாவக்கறை போக்கிடவே
காலமெல்லாம் கதிரவனாய்ப் பிறந்திட்ட பாலகா

மனித மனங்கள் நாளும் பொழுதும் நலிவுற்ற வேளைதனில்
மனித மாண்பின் மகிமை மறந்து வாழும் சூழமைவில்
மகிமை நிறை வேந்தனாய் - மண்ணில்
மனித மாண்பு நிலைபெற்றிட பிறந்திடு பாலகா

மனித சிந்தை யாவும் தான்தோன்றித் தனமானதினால்
தன்நிலை மறந்து சுயநலத்துடன் வாழ்வதினால்
மனித உறவின் பாசம் அற்ற பூமி தனில்
உறவின் உயிரோட்டமாக பிறந்திடு பாலகா

இயற்கையின் தாண்டவம் இயல்பாய் செயற்பட
ஏதுமறியா ஏதிலிகளாய் ஏக்கம் கொண்டு வாழும்
எம் மக்கள் சுமைகளைச் சுகமாக்கித் துயர்களைத் துடைத்திடும்
விடிவெள்ளியாய் வந்து பிறந்திடு பாலகா

வெள்ளப் பெருக்கினாலும் விடாத மழையினாலும்
வேதனையுறும் மக்கள் மத்தியிலும் இன்று
உயிர் வாழ உணவின்றி இல்லிடம் ஏதுமின்றி
தத்தளிக்கும் மாந்தரிடம் தஞ்சமென வந்திடு பாலகா

அன்பு அரவணைப்புப் பகிர்வு பாசமதை
அனர்த்தமூடே ஆழமாய் புரிய வைத்து
ஆணவம் தனை அகற்றி - ஆழமான இறையுறவில்
வாழ்ந்திட வாழ்வளிக்கும் வள்ளலாய் பிறந்திடு பாலகா

வெட்டும் கொத்தும் மலிந்திட்ட வேளைதனில்
குழுக்களின் கோரத்தாண்டவமும் கொடிய செயல்களும்
குறைவின்றி மலிந்த மண்ணகத்தில் - மனங்களை மாற்றி
குறைதீர்க்கும் மனுமகனாய் பிறந்திடு பாலகா

நன்மை தீமை அறிந்திடும் மனசாட்சியினை மழுங்கடித்து
மற்றவர் முதுகில் குத்தும் மட்டமான செயல்கள் செய்து
மதிமயங்கும் போதையினால் வாழ்வைத் தொலைத்து வாழும்
எம்மவர்க்கும் மறுவாழ்வு கொடுத்திட வந்திடு பாலகா

கடன் தொல்லை அதிகமாகிக் கண்ணீர் விடும் மாந்தரிடம்
மீற்றர் வட்டி மேலோங்கி உறவிழந்து வாழும் உள்ளங்களிலும்
பிரமிட் செயலினால் உள்ளதையும் இழந்த மனிதரிடையே
உள்ளத்தில் நிம்மதியை உவர்ந்தளிக்க வந்திடு பாலகா

குடும்ப உறவில் விரிசல்களும் உறவுகளில் உதாசீனமும்
பணத்திற்காய் உறவுகளை மறந்திட்ட மனங்களிலுல்
பணத்தினால் எதையும் செய்ய முயலும் மனங்களிலும்
பக்குவமாய் மனித வாழ்வை எடுத்தியம்ப பாரினில் வந்திடு பாலகா

தெய்வ பயம் அற்ற வாழ்விலும் தேவையற்ற வெளிவேட வாழ்விலும்
ஆன்மீக வறட்சி நிறைந்த அர்த்தமற்ற மனங்களில்
அன்புறவாய் ஆருயிராய் அரவணைக்கும் காருண்யனாய்
ஆண்டவன் இருப்பதினை ஆழமாய் உணர்ந்திட வந்திடு பாலகா

மாதகலூர் அனுஸ்

# பேரிடர் பூமியில் உன் வருகை

மார்கழிக் குளிரினிலே, குதூகலமாய் உன் வரவை
எதிர்பார்த்த எம்மவர் நெங்சங்களுக்கு
ஏற்பட்ட ஓர் பேரழிவு வெறும் அனர்த்தமாக - இன்றி
பல்லாயிரம் நாடுகள் ஒன்று சேர்ந்து
உன் வருகையை புதுவிடியலோடு எதிர்கொள்ள
ஒரு குடும்பமாக மாற்றியது

ஏனோ என்று தெரியவில்லை, பல காரணங்கள்
கண்டும் உனை எதிர்க்க மனம் துணிவதில்லை - இறைவா
பொன், பொருள் இழந்து நிற்கின்ற எம்மவர்களுக்கு
உன்பிறப்பு எவ்வளவு எளிமையானது என்று
இன்று உணரவைத்தது இந்த - பேரழிவு

உறவுகளை இழந்து கெஞ்சும் இரங்கல்கள்
கேட்கின்றதா உன் செவிகளில் - என் இறைவா!
எம்மவர் படும் பதறல்களை உன் வரவால்
ஏற்றுப் புதுவாழ்வைத் தந்தருள்வாய் என் இறைவா

சொந்த மனைகள், மாளிகைகள் இழந்து நின்றாலும்
மன்னவனே உன் வருகைக்காக ஏங்கி நிற்கின்றன
- எம் மனங்கள்



பாரினிலே வந்து உதித்தாய் எம்
உறவுகளின் அவலங்களை
பலகோடி கைகளில் உதவிகளால்
நிறைவேற்றி நின்றாய்

எத்தனை மார்கழி கடந்தாலும் மறக்குமா எம் நெஞ்சம்
இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு
மார்கழியை - காரணம்
இரண்டாம் மனுக்குல மீட்பை
இன்னோர் முறை எம் அறிவுக்கு
உணரவைத்ததாலா? மீட்பின் பாதையில்
நாம் வழி நடக்க



மாறா மனங்களை மாற்றி வைத்தாய்
பேரிடர் பூமியில்
உன் வருகையால் இந்தப் பேரழிவுகளின் ஊடாக
இரு கரங்கள் கூப்பி நிற்கின்றோம்
- இன்னல்களுக்கிடையில்
இன்னோர் முறை உனைக்காண
மனுமகனாய் அல்ல மனிதர்களின் சாயலில்

அருட்சகோதரன் அருள்ராஜ்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(மதன், கொழும்பு)*
**கேள்வி: 'டித்வா' புயலினாலும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினாலும் மக்கள் பெரும் இடரினைச் சந்தித்தபோது நம் மக்களின் மனித நேயத்தைப் பார்த்து வியந்து போனேன்! இக்காலத்தில் நடைபெற்ற மனிதநேயச் செயற்பாடுகள் எப்படி இருந்தன?**
**பதில்:** மதன், உண்மையில் மெச்சத்தக்கது. ஆனால், இத்தகைய மனித நேயப் பணி ஆபத்தில் மட்டும் உதவுவதாக இராமல் எப்போதும் நம்மில் வெளிப்படும்படி இருந்தால்தான் அது மேன்மையான மனித நேயமாகத் துலங்கும்!

(மணி, யாழ்ப்பாணம்)
**கேள்வி: தங்கள் இயல்பை மறைத்து மற்றவர்கள் முன்பாக மாறுவேடம் பூண்ட மனிதர்கள் போலச் சிலர் நடந்துகொள்கிறார்கள் அல்லது நடித்துக்கொள்கிறார்கள்! இவர்களின் உண்மை முகம் எப்போது வெளிப்படும்?**
**பதில்:** மணி, ஒன்றை மனத்தில் பதித்து வைத்துக் கொள்ளுங்கள்: 'மனிதர்கள் எத்தனை அழகாக மாறுவேடம் போட்டாலும் காலமும் சூழ்நிலையும் அவர்களது இயல்பான குணத்தைக் காட்டிக் கொடுத்துவிடும்!'

(விஜி, யாழ்ப்பாணம்)
**கேள்வி: அண்மையில் நடந்து முடிந்த டித்வா புயலுடன் கூடிய வெள்ளப் பெருக்கின் அனர்த்தத்தில் 820 பேர் அளவில் இறந்தும் காணமல்போயும் உள்ளனர். இதனை விடப் பல்லாயிரம் கோடி ரூபா சொத்துக்களும் அழிந்துபோய் உள்ளன. இதற்கு இயற்கை மட்டும் காரணமல்ல, மனிதனும்தான் என்ற கருத்தையும் சிலர் கூறுகின்றனர்! உண்மையா?**

**பதில்:** உண்மை. காரணம், மண்சரிவைத் தடுக்கக்கூடிய பெருங் காடுகளை அழித்துப் பயிர்கள் செய்தமை, மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில் மக்கள் குடியேறியமை அல்லது குடியேற அனுமதித்தமை, அனர்த்தம் நடைபெறப் போகிறது என்பது ஓரளவிற்குத் தெரிந்தும் குறிப்பிட்ட அக்குறுகிய நேரத்திற்குள் முழுமூச்சாக முன்னாயத்தங்களில் இறங்காமை போன்ற காரணங்கள் இத்தனை உயிரிழப்புகள் ஏற்படக் காரணமாக இருந்திருக்கலாம்.

(சுரேன், மன்னார்)

**கேள்வி: காலத்திற்கேற்ற கவிதை ஒன்று சொல்வீர்களா?**
**பதில்:** நிச்சயமாக! "எங்கள் நாட்டில்தான்
கூடியிருந்து
குடிக்கும்போது
'சோசலிசம்' பேசுவார்கள்!
விடிந்ததும்
வெறிமுறிந்ததும்
'சாதி' பார்ப்பார்கள்!"
2018 தையில் 'ஜீவநதி'யில் 'சோசலிசமும் சாதிசமும்' என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதை இது!

(றமேஷ், யாழ்ப்பாணம்)
**கேள்வி: உருவாக்குதல், உருக்குலைவு பற்றி முகநூலில் எழுதியிருந்தீர்கள். அதனை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?**
**பதில்:** தாராளமாக! ஒரு பாடசாலையில் ஆங்கில மொழிப் போட்டி நடைபெறுவதாக இருந்தது. பல மாணவர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். ஒரு மாணவனுக்கான போட்டி காலை 9 மணிக்கென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 11 மணியாகியும் அவனுக்கான போட்டி நடைபெறுவதாய்த் தெரியவில்லை. இந்நிலையில் அவன் களைப்படைந்து, அப்பாடசாலை ஒரு மண்டபத்தின் சுவரின் மீது ஏறிக் குந்திக்கொண்டு இருக்கிறான். அப்பக்கமாகக் கடந்துசென்ற அவனின் நண்பன் ஒருவன் அவனைக் கட்டுவிட்டான்: "என்னடா குருங்குமாதிரி இதில குந்திக்கொண்டிருக்கிறாய்!?" எனச் சொல்கிறான். அவனோ பதிலுக்கு, 'வரும்போது மனிசனாத்தாண்டா வந்தன். இங்க, என்னைக் குரங்காக்கி குந்த வச்சிற்றாங்க!' என்றான். அவனை ஒருகணம் ஆச்சரியத்தோடு பார்த்துவிட்டு வந்துவிட்டேன். அவனை மறந்துவிட்டேன். அந்நாளையும் மறந்துவிட்டேன். ஆனால் அவனின் கூற்று என் காதுகளில் அடிக்கடி எதிரொலித்த வண்ணமாகவே இருக்கிறது!' வரும்போது மனிசனாத்தான் வந்தன். என்னைக் குரங்காக்கிக் குந்த வச்சிற்றாங்க!' என் உருவாக்கத்தில் அதாவது ஆங்கிலத்தில் 'formation' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். எங்கள் இலக்கை அடைய பல துறைகளில் நாம் உருவாக்கப்படுகிறோம்! உருவாக்கத்திற்கு எதிர்ச்சொல் உருக்குலைவு ஆகும்! ஆங்கிலத்தில் 'deformation' ஆகும். உருவாக்கம் நடைபெறும் காலத்தில் உருவாக்கத்திற்குப் பதிலாக ஒருவரில் உருக்குலைவும் இடம்பெறலாம். உருவாக்கம் என்ற சொல்லுக்கு உதாரணமாக ஒரு பிள்ளையை உண்மையான உயர்ந்த மனிதனாக்குவதாகும் (மனிதன் உண்மை மனிதனாவது). உலைக்குலைவுக்கு உதாரணமாக ஒரு பிள்ளையைத் தன் ஆளுமையை இழந்து சீரழிந்து போவதாகும் (மனிதன் குரங்கு போலாவது அல்லது குரங்குக் குணங்களைத் தனதாக்கிக் கொள்வது!). பெற்றோர்கள் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் சமூக வழிகாட்டிகள் கல்வியலாளர்கள் மதப் பெரியோர்கள் போன்றோரின் செயற்பாடுகள், நடத்தைகள் பிள்ளைகளுக்கு - மாணவர்களுக்கு உருவாக்கத்தை அளிக்கிறதா அல்லது உருக்குலைவில் வளர உதவகிறதா? புதிய ஆண்டு தொடங்கவிருக்கிறது. புதிய சிந்தனைகளையும் உள்வாங்கி புதிய உத்வேகத்தோடு பெற்றோர், ஆசிரியர், வழிகாட்டிகளாகிய நாம் நற்சமூகத்தை உருவாக்கப் புறப்படுவோம்!

(அருள், யாழ்ப்பாணம்)
**கேள்வி: இம்முறை கிறிஸ்துபிறப்பு விழா எப்படி இருக்கப் போகிறது?**
**பதில்:** அருள், பொதுவாகப் பாலகன் இயேசுக் கிறிஸ்துவை மாட்டுக் கொட்டிலில் வைத்துவிட்டு மக்கள் அவரை மறந்து போய்விடுகிற நிலைமைகளையும் பார்க்கலாம்! இம்முறை, மிகவும் எளிமையாகக் கொண்டாடும் பாடத்தை இயற்கை நமக்குக் கற்றுத் தந்திருக்கிறது! இது இயற்கையின் திருவிளையாடல்! அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள் உரித்தாகுக!


**20ம் ஆண்டு நினைவஞ்சலி**

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 22 - 05 - 1927 |  | 22 - 12 - 2005 |


**அமரர் சாமிநாதன் திருச்செல்வம்**

(மல்வம் திருக்குடும்ப ஆலய மூப்பர் ஜேக்கப் அருளப்புவின் மருமகன்)

"உயிரோடு இருக்கும்போது என்னிடம்
நம்பிக்கை கொள்ளும்
எவரும் என்றுமே சாகமாட்டார்"
(யோவான் 11:26)



**விண்ணக வாழ்வின்**
**14 ம் ஆண்டு நினைவலைகள்**



| தாய் மடியில் | | பேரின்ப வான் வீட்டில் |
|---|---|---|
| 12 . 07 . 1942 |  | 22 . 12 . 2011 |

"உமது திருவுளப்படியே
என்னை நடத்துகின்றீர்
முடிவில் மாட்சிமையோடு
என்னை எடுத்துக் கொள்வீர்"
(திருப்பாடல் 73:24)

என்றென்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

அமரர்
**வைத்திய கலாநிதி மரிசலீன்பிள்ளை மரியதாசன் (JP)**
(பேரின்பம் – வல்வெட்டித்துறை)
யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி M.O.H (2001-2011)

ஆவே மரியா
72 கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

# குருத்துவ வாழ்வில் 62 ஆண்டுகள்



இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் இற்றைவரை நற்கனி கொடுத்து வரும் ஆயர் ஆண்டகையே குருத்துவ வாழ்வின் அறுபத்திரெண்டாம் ஆண்டினில் அடியெடுத்து வைத்து பணிக்குருத்துவத்திற்கு அணிசெய்யும் நல்லாயன் உந்தன் பணி வாழ்வு நம் திருஅவைக்கு அடித்தளம் நம் மறைவாழ்விற்கு முன்னுதாரணம் இந்நாளில் இறையருள் வேண்டி அன்புடன் வாழ்த்துகின்றோம்.

## யாழ். மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டி



யாழ். மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டி கடந்த 07ஆம் திகதி யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இணைப்பாளர் அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இப்போட்டியில் யாழ். மறைக்கோட்டப் பங்குகளைச் சேர்ந்த 06 குழுக்கள் பங்குபற்றியிருந்தன. இப்போட்டியில் பாண்டியன்தாழ்வுப் பங்கு முதலாமிடத்தையும் சுண்டுக்குளி பங்கு இரண்டாமிடத்தையும் நாவாந்துறைப் பங்கு மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

## 'தர்மபிரபாஷ்வர' விருது பெறும் அண்ணாவியார் அன்று யூலியஸ்




இலங்கை அரசின் உயர் விருதுகளில் ஒன்றாகிய "தர்மபிரபாஷ்வர" வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றார் குருநகர் மண்ணின் மைந்தன் அண்ணாவியார் அரியநாயகம் அன்று யூலியஸ் அவர்கள் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு, கலாசார அமைச்சு மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்துடன் தேசிய கத்தோலிக்க மக்கள் தொடர்பு மையம் இணைந்து ஏற்பாடு செய்த "தர்மபிரபாஷ்வர" விருது வழங்கும் வைபவம் 2025.12.15 திங்கட்கிழமை கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.கிறிஸ்தவ கலைகள் மூலம் மக்களுக்கும் நாட்டிற்கும் ஆற்றிய அபிமானமிக்க சேவைகளைப் பாராட்டி இவ் வாழ்நாள் சாதனையாளர் விருதானது வழங்கப்பட்டது. யாழ்ப்பாண மறை மாவட்டம் யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயப் (OLR) பங்கு மகனுமாவார்

## அனுராதபுர மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்



அனுராதபுரம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருட்பணி. நிஷாந்த சாகர ஜெயமான்ன SSS திருத்தந்தை 14வது லியோ அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நற்கருணை நாதர் சபையினைச் சேர்ந்த துறவியாவார். கொழும்பு மறைமாவட்டத்தினை சேர்ந்த இவர் 1970 ஜூன் 25 போபிட்டியா வில் பிறந்தார். இவர் 13.05.2000 இல் குருத்துவ அருட்பொழிவு பெற்று நற்கருணை நாதர் சபையில் நிதியாளர் மற்றும் பல உயர் பதவிகளையும் வகித்தவர். அது மட்டுமன்றி மாத்தளை ஹன்வெல்ல பகுதிகளில் உதவிப் பங்குத் தந்தையாகவும் கண்டி தேசிய குருமடத்தில் பேரா சிரியராகவும் பின்னர் ஹன்வெல்ல பகுதியில் உள்ள தியான இல்லத்தின் இயக்குனராகவும் பணியாற்றினார. பின்னர் நற்கருணை நாதர் சபையின் முதல்வர் பதவியினையும் வகித்தார் தற்பொழுது ஆயராக திருத்தந்தையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தற்போதைய ஆயர் அன்றாடி ஆண்டகை அவர்கள் ஓய்வு பெற்றநிலையில் புதிய ஆயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

புதிய ஆயருக்கு யாழ்ப்பாண மறைமாவட்டம் சார்பாக அன்பான வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

## ஆடம்பரங்களைத் தவிர்த்து அர்த்தமான முறையில் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட அழைப்பு யாழ் குருமுதல்வர்



டிட்வா புயல் தாக்கத்தால் இலங்கையில் உருவான வெள்ளப்பெருக்கு, மண்சரிவு அனர்த்தங்களால் உயிரிழந்த, மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை மனதில் கொண்டு வருகின்ற கிறிஸ்து பிறப்பு விழாவை அமைதியுடனும் அர்த்தமுள்ள வகையிலும் கொண்டாடுமாறு யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்கள் இறைமக்களை கேட்டுக்கொண்டுள்ளார். பொருத்தமற்ற ஆடம்பரங்களை தவிர்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக் கரம் நீட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்து, பாலன் இயேசு கொண்டுவந்த அமைதி விடுதலை ஆகிய நற்செய்திகளை மக்களுக்கு அறிவித்து, துன்புறும் மக்களோடு ஒன்றிணைந்த உள்ளங்கொண்டு கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுமாறு மேலும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## 2025 யூபிலி ஆண்டு நிறைவு



2025 யூபிலி ஆண்டு யாழ். மறைமாவட்ட தலத்திரு அவைகளில் மார்கழி மாதம் 28ஆம் திகதி திருக்குடும்பப் பெருவிழாவுடன் நிறைவுக்குக் கொண்டுவரப்படவுள்ளதென யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் தெரிவித்துள்ளார். அன்றைய தினம் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யூபிலிக் கதவு ஆயர் அவர்களால் பூட்டப்பட்டு மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும் சிறப்புத் திருப்பலிகள் இடம்பெறுமெனவும் மேலும் அவர் குறிப்பிடடுள்ளார். உலகளாவிய ரீதியில் வத்திக்கான் ப.2

## மலேசியாவில் நடைபெற்ற மாபெரும் நம்பிக்கையின் திருப்பயணிகள் மாநாடு



பெனாங்க், மலேசியா ஆசியக் கத்தோலிக்க திருச்சபையின் முக்கிய நிகழ்வான "மாபெரும் நம்பிக்கையின் திருப்பயணிகள் மாநாடு" கடந்த நவம்பர் 27-30 வரை பெனாங்கில் நடைபெற்றது. ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பு (FABC) ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், 32 நாடுகளிலிருந்து 900-க்கும் மேற்பட்ட கார்டினல்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் கலந்து கொண்டு, நம்பிக்கை மற்றும் திருச்சபைப் பணியைப் பற்றி ஆழமாக சிந்தித்தனர்.

இந்த யாத்திரைக்கு தலைமையேற்ற கார்டினல் லூயிஸ் அன்டோனியோ டாக்ளே, ஆசியத் திருச்சபை பணிவுடனும் நம்பிக்கையுடனும் புதிய வழிகளில் பயணிக்க வேண்டுமென வலியுறுத்தினார். ஜெபங்கள், உரைகள், கலந்துரையாடல்கள் மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் மூலம், இந்நிகழ்வு ஆசியக் கத்தோலிக்க திருச்சபையின் ஒற்றுமையையும் எதிர்காலப் பணிக்கான உறுதியையும் வெளிப்படுத்தியது.இம்மாநாட்டில் யாழ் மறைமாவட்ட திரு த்தந்தையின் மறைபரப்பு சபைகளின் இயக்குனர் அருட் பணி எஸ்.ஏ. றொஷான் அடிகளாரும் கலந்துகொண்டார்.

## டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட மன்னார் மக்களுக்கு யாழ். மறைமாவட்ட புனித வின்சன்ட் டி போல் சபை உதவி



டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட மன்னார் மக்களுக்கு யாழ். மறைமாவட்ட புனித வின்சன்ட் டி போல் சபையினரால் ஒரு தொகுதி உதவிப்பொருட்கள் கடந்த 12ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டுள்ளன. யாழ். மறைமாவட்ட புனித வின்சன்ட் டி போல் சபை பந்திகள் மூலம் சேகரிக்கப்பட்ட இவ் உதவிப்பொருட்கள் மன்னார் மறைமாவட்ட வின்சன்ட் டி போல் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை ரஞ்சன் சேவியர் மற்றும் மத்திய சபை உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது. யாழ். மறைமாவட்ட வின்சன்ட் டி போல் சபை ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களின் தலைமையில் மன்னார் மறைமாவட்ட குடும்ப பணிகள் மற்றும் பொதுநிலையினர் நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மத்திய சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். தொடர்ந்து சபை ஆன்மீக இயக்குநரும் உறுப்பினர்களும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களை மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் சந்திந்து கள நிலவரங்கள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்கள்.

## டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட பதுளை மாவட்ட மக்களுக்கு இளவாலை மறைக்கோட்ட இறைமக்கள் உதவி



இளவாலை மறைக்கோட்ட இறைமக்கள் இணைந்து பதுளை மாவட்டத்தில் டிட்வா புயலின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு தொகுதி நிதி உதவியை அண்மையில் வழங்கியுள்ளனர். இன மத மொழி பேதங்கள் கடந்து பாதிக்கப்பட்ட மக்களுடன் தமது தோழமையையும், அக்கறையையும், உடனிருப்பையும் வெளிப்படுத்தும் முகமாக பண்டத்தரிப்பு, இளவாலை, போயிட்டி, சில்லாலை பங்கு மக்கள் இணைந்து மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை யேசுதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் முன்னெடுத்த இந்நிகழ்வில் பங்குத் தந்தையர்களும் மறைக்கோட்ட முதல்வரும் பதுளை மாவட்டத்தை தரிசித்து அங்கு பசறை, துணுகல மற்றும் மடுல்சீம பிரதேசங்களை பார்வையிட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 18 இலட்சம் ரூபாய் பணத் தொதையை வழங்கிவைத்தார்கள். இந்நிகழ்வில் கிளறேசியன் சபை அருட்தந்தை வரதன், உரும்பிராயப் பங்கின் வின்சன்டி போல் பந்தி தலைவர் திரு. றொசான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்ட